இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
ilakku.org
அனைத்துலக தமிழ் ஊடக மையம்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1


இதழ் 268 | சனி, ஜனவரி 06, 2024 | 15 பக்கங்கள்

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 50வது நிறைவாண்டுச் சிறப்பிதழ்

# புதுவருட சவால்களை இலங்கை தாங்குமா?

அகிலன்

# இளைஞர்களை கிளர்ந்தெழ வைத்த தமிழாராய்ச்சி மாநாட்டுக் கொலைகள்



சி.வி.கே.சிவஞானம்; 50 வருட நினைவுகள்



# பிராந்தியப் போராக விரிவடையும் இஸ்ரேல் - பாலஸ்தீன போர்

வேல்ஸ் இல் இருந்து அருஸ்



© 2023 இலக்கு இணையம்

# சீரற்ற கால நிலையால் விவசாய செய்கைகள் பாதிப்பு



இலங்கையில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக கிண்ணியா பகுதியில் உள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தோட்டச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிண்ணியா உப்பாறு கிராம சேவகர் பிரிவின் மயிலப்பன் சேனை, சோளவெட்டுவான், காரவெட்டுவான், கண்டல் காடு போன்ற கிராமங்களில் கடந்த ஐந்து நாட்களுக்கும் மேலாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக மேட்டு நிலப் பயிர்களான மிளகாய், மரவெள்ளி ,கத்தரி வெண்டி, கச்சான் உள்ளிட்ட பயிரினங்கள் அழிந்துள்ளதால் நஷ்டமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கைவண்ணத்தில் உருவான படைப்புக்கள்



சண்டிலிப்பாய் பிரதேசசெயலக உத்தியோகத்தர்களின் கைவண்ணத்தில் உருவான படைப்புக்களின் சிறிய கண்காட்சி ஒன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த புதன் கிழமை(3) இடம்பெற்றுள் ளது.

சூழல் நேய பொருட்கள் மற்றும் மீள் சுழற்சிக் குட்படுத்தக்கூடிய பொருட்களைக் கொண்டு பிரதேச செயலாளரின் வழிகாட்டலின்கீழ் பிரதேச

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# விமானம் தீப்பற்றியதை அறியாத விமானிகள்

கடந்த செவ்வாய்க்கிழமை(2) யப்பானில் கனெடா விமான நிலையத்தில் இடம்பெற்ற விபத்தில் ஏயர்பஸ் ரக விமானம் தீப்பற்றி எரிந்தபோதும் அதனை அதன் விமானிகள்மூவரும்அறியவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.


யப்பானின் விமான நிறுவனத்திற்கு சொந்தமான 516 என்ற இலக்கமுயைடய விமானம் தரையிறங்கியபோது, விமான ஓடு பாதையில் பறப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த Bombardier Dash-8 என்ற சிறிய விமானத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.



சிறிய விமானத்தில் இருந்த 6 பேரில் 5 பேர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார். இந்த விமானம் திங்கட்கிழமை(1) இடம் பெற்ற பூமி அதிர்வினால்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

# ஈரானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 105 பேர் பலி



ஈரானில் கடந்த புதன்கிழமை(3) இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஏறத்தாழ 110 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 170 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த குண்டுவெடிப்புக்கள் ஈரானின் காட் படைப்பிரிவு எனப்படும் வெளியக புலனாய்வு அமைப்பின் கட்டளை அதிகாரி ஜெனரல் சொலமானி கொல்லப்பட்ட நினைவு தினத்தில், அவரது சமாதியில் இடம்பெற்ற நினைவுக் கூட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி சொலமானி ஈராக்கிற்கு பயணம் மேற்கொண்ட சமயம் விமானநிலையத்தில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஹமாஸ் பிரதித் தலைவர், இரு தளபதிகள் பலி



லெபனானின் தலைநகர் பெய்ருட்டின் தென் பகுதியில் அமைந்திருந்த ஹமாஸின் அலுவலகத்தின் மீது இஸ்ரேலின் ஆளில்லாத தாக்குதல் விமானம் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் கடந்த செவ்வாய்கிழமை(2) ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவின் பிரதித் தலைவர் சலா அல் அருறி(57) உட்பட 7 பேர் கொல்லப்பட்டுள்ளதாக லெபனானின் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் இருவர் ஹமாஸ் அமைப்பின் படைத்துறை தளபதிகள் ஏனைய நான்குபேரும் உறுப்பினர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

தாம் மேற்கொண்ட தாக்குதலிலேயே ஹமாஸின் தலைவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேலின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஹமாஸ் அமைப்பின் வெளிநாடுகளில் உள்ள தலைவர்கள் கொல்லப்படுவார்கள் என இஸ்ரேல் பிரதமர் அண்மையில் தெரிவித்துள்ள நிலையில் இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளது.


இந்த தாக்குதலை கண்டித்துள்ள ஹமாஸ் அமைப்பு பதில் தாக்குதல் நடத்தப்போவதாக எச்சரித்துள்ளது. லெபனானில் இடம் பெற்ற இந்த தாக்குதல் என்பது தமது நாட்டின் இறைமையை மீறும் செயல் என ஹிஸ்புல்லாக்கள் தெரிவித்துள்ளனர். அதேசமயம், இஸ்ரேல் லெபனானை வலிந்து போருக்கு இழுப்பதாக லெபனானின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட றொவ்றி என்பவர் ஹமாஸின் தலைவர் இஸ்மாயிலின் நெருங்கிய சகா எனவும், ஹமாஸ் அமைப்பின் இராணுவப் பிரிவான அல் குசாம் பிரிகோட்டின் முக்கிய தலைவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. லெபனானின் ஹிஸ்புல்லாக்களுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான தொடர்புகளை அவரே பேணி வந்துள்ளார்.

# இந்த வருடம் பூட்டீனும் டிறம்பும் வெற்றிபெறலாம் கருத்துக்கணிப்பு

இந்த வருடம் ரஸ்யாவில் இடம் பெறும் அரச தலைவர் தேர்தலில் தற்போதைய அரச தலைவர் விளமிடீர் பூட்டீன் எதிர்தரப்பு வேட்பாளரை இலகுவாக தோற்கடிப்பார் என லி.பிகாரோ நாளேடு தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

உக்கிரைனையும், மேற்குலக கூட்டணியையும் அவர்களின் எல்லைக்குத் தள்ளுவதுடன், தன்னையும் பலப்படுத்தும் ஆண்டாகவே 2024 இருக்கப்போகின்றது. உக்ரைன் மீதான படைநடவடிக்கை மூன்றாவது ஆண்டுக்குள் நுளைகின்ற இந்த தருணத்தில் ஆரம்ப கருத்துக் கணிப்புக்கள் ரஸ்ய அதிபருக்கு அனுகூலமாகவே உள்ளது.



மறுவளமாக அமெரிக்க தேர்தலில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் செல்வாக்கு சரிந்து வருகின்றது. உக்ரைனின்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இஸ்ரேல் மீதான இனஅழிப்பு வழக்கு அடுத்த வாரம் ஆரம்பம்



இனஅழிப்பு குற்றம் என்ற வழக்கை இஸ்ரேல் மீது தென்னாபிரிக்கா கடந்தவாரம் நெதர்லாந்தில் உள்ள அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் தொடுத்துள்ளது. அதந்த வழக்கு எதிர்வரும் 11 ஆம் நாள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் தற்போது மலேசியாவும் அதற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இனஅழிப்புக்கு எதிரான சரத்துக்களை இஸ்ரேல் மீறி வருவதாகவும், அது காசா பகுதியில் ஒரு இன அழிப்பை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

இலக்கு

# ஈழத்தமிழர் இறைமையின் பாதுகாப்பிலேயே முஸ்லீம் மலையக மக்களின் பாதுகாப்புண்டு

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம், மத்தியஸ்தசபை (திருத்தச் சட்ட மூலம்), மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்று அங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்ட மூலம் ஆகிய மூன்று சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தலைமையில் 04.01.24 இல் கூடிய பொழுது அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் கிராம மட்ட முரண்பாடுகளைத் தீர்க்க சகவாழ்வு மையங்களும் கிராமங்களில் தொடங்கப்படவும் இக்குழு அனுமதி அளித்துள்ளது. கூடவே இந்த அலுவலகத்திற்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான இக்குழுவின் பரிந்துரைகளை நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருக்கு அனுப்பி வைப்பதெனவும் இந்தக் குழுவில் தீர்மானமெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக இந்த ஆண்டு தொடங்கிய முதல் வாரத்திலேயே சிறிலங்கா சிங்களவருக்கு உரிய சிங்கள நாடு பௌத்த ஆகமயச் சட்டத்தைக் கொண்ட நாடு என்ற மகிந்த கோத்தபாய சிந்தனையை நடைமுறைப்படுத்துவதற்கான ரணிலின் திட்டம் ஆரம்பமாகி விட்டது. உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு என்பது இதனை ஏற்று சிங்களவருக்கான அடிமைச் சமுகமாக வாழ ஈழத்தமிழர்களையும் முஸ்லீம் மலையக மக்களையும் பழக்குவதாகவே அமையும். இதற்குத் துணையாக தென்னாபிரிக்கா சுவிஸ் யப்பான் ஆகிய நாடுகளையும் நல்லிணக்கமாக வாழப் பயிற்சி அளித்தல் என்ற பெயரில் இந்நாடுகளின் தூதுவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி விட்டே அடுத்து சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

ஈழத்தமிழர்களுக்கு அவர்களுடைய நாளாந்த வாழ்வுக்கான இனங்காணக்கூடிய அச்சத்தை அளிக்கும் விடயங்களில் அரசத்தலைவர் என்ற முறையில் ஏதாவது செய்வதாக யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறுவார் என்ற எதிர்பார்ப்பு பலரிடை இருந்தது. ஆனால் அவர் மக்களுக்குப் பாதிப்பு அளிக்கும் எந்த விடயத்திலும் தான் எதுவும் செய்ய நினைக்கக் கூட மாட்டார் என்பதை உறுதிப்படுத்தும் பலத்த மௌனத்தை யாழ்ப்பாணத்தில் வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் மாகாணங்களுக்கான பொருளாதாரப் பங்களிப்பைத் தமிழர்கள் செய்வதற்கு இப்போது அரசியலமைப்பில் உள்ள 13 வது திருத்தம் மற்றைய மாகாணங்களைப் போல் தமிழர்க்கும் போதும் என்கிற போதனையையும் யாழ்ப்பாணத்தில் வைத்தே செய்துள்ளார். இதன்வழி அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற கோத்தபாயாவின் கொள்கையே தனது கொள்கை என மொட்டுக்கட்சிக்காரர்களுக்கும் தெளிவுபடுத்தித் தனது ஜனாதிபதி பதவியைத் தக்கவைப்பதற்கான முயற்சியையும் வெற்றிகரமாக நிலைநாட்டியுள்ளார். அதே வேளை 13ம் திருத்தம் என்பது தமிழர்களுக்கான சிறப்பான ஒன்றல்ல எல்லா மாகாணங்களுக்கும் நிதி பகிர்வை ஒழுங்குபடுத்துகின்ற ஒன்று என்பதையும் ரணில் மீளவும் தெளிவுபடுத்தி 13ஐ தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கரகமாடும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தலையிலடிகொடுத்துள்ளார். ரணிலின் நரித்தந்திரமான இந்த இராஜதந்திரத்தின் மற்றொரு செயற்பாடாக இஸ்ரேலிய கமாஸ் யுதத்தத்தில் செங்கடலில் கப்பல் போக்குவரத்தைப் பாதுகாக்க இஸ்ரேலுக்கு ஆதரவாக கட்டமைக்கப்பட்டு வரும் ஆபரேசன் ப்ரொஸ்பரிட்டி கார்டியன் கப்பல் படையணிக்குச் சிறிலங்காக் கடற்படைக் கப்பல்களையும் இணைத்துள்ளார். இதனால் இலங்கையில் முஸ்லீம் மக்களிடை பலத்த அதிருப்தி தோன்றியுள்ளது. இவ்வாண்டின் முதல் வார நிகழ்வுகள் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் இறைமையின் பாதுகாப்பிலேயே முஸ்லீம் மலையக மக்களின் பாதுகாப்புண்டு என்பதை அவர்கள் மனதிருத்த வேண்டுமென இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது. நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அரசாங்கத்தால் தொடங்கப்பட்டுள்ளது போல 2024 இல் ஈழத்தமிழர்களும் மலையக முஸ்லீம் மக்களும் மனந்திறந்து பேச்சுக்களை நடாத்தித் தங்களிடை நல்லிணக்கம் மற்றும் இனத்துவ ஒற்றுமைக்கு வழிகாட்டக் கூடிய தங்களின் துறைசார் அனுபவசாலிகளின் பேரவையைத் தோற்றுவிக்க வேண்டும் இதுவே கூட்டாக ரணிலின் நரித்தந்திர அரசியலை எதிர்கொள்ளும் பலத்தைத் தரும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

மேலும் சிறிலங்காவின் பாதுகாப்புக்கான யூனியர் அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் 200000 ஆக உள்ள இராணுவத்தினரை 2024 இல் 135000 ஆகவும் 2030க்குள் 100000 ஆகவும் குறைத்தல் இன்றைய பொருளாதாரத்தின் தேவையாகக் கருதுகின்றார். இவ்வாறு இராணுவத்தினர் படையிலிருந்து விலக்கப்படுகையில் அவர்களைத் தமிழர் தாயகப்பகுதிகளில் குடியேற்றுவதன் மூலம் அவர்களுக்கான வாழ்வுக்கு உதவுகின்ற நேரத்தில் தமிழர் தாயகப்பகுதிகளின் நிலத்தைச் சிங்கள மயப்படுத்தும் நோக்கையும் சிறிலங்கா நிறைவேற்றிக் கொள்ளும். இத்தகைய வடக்கு கிழக்குச் சிங்களக் குடியேற்றங்களுக்குத் தொண்டர் அமைப்புக்கள் வழியான உதவிகளை அவர்களுக்குப் பெருக வைத்து அவ் உதவிகளுக்கான அனைத்துலக நிதிகளையும் பெறுதல் என்பது ரணிலின் மற்றொரு ராஜதந்திரச் செயல். இதனை உறுதிப்படுத்தக் கூடிய வகையிலேயே "எனது யாழ்ப்பாணக் கனவு அறக்கட்டளை" (My Dream Jaffna Foundation) மசோதா சிறிலங்காப் பாராளுமன்றத்தில் கேகாலை மாவட்ட பாராளுமன்றப் பிரதிநிதி சரதி டுஸ்மந்தவால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த எனது யாழ்ப்பாணக் கனவு அறக்கட்டளை யாழ்ப்பாணத்தில் நலிவடைந்தோரின் கல்வி மற்றும் வாழ்வியல் தேவைகளுக்கு உதவுதல் என்ற பெயரில் அங்கு குடியமர்த்தப்படும் சிங்களக் குடும்பங்களுக்கான நிதி உதவிகளை வழங்கி அவர்களை யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியமரச் செய்யும் என்பது உறுதி. இவ்வாறு சிங்கள ராஜதந்திரம் தன்னை பலவாறாக நிலைப்படுத்துகையில் தமிழரின் ராஜதந்திரம் எவ்வாறு உள்ளது என்பதை ஆசிய பசுபிக் பகுதியின் முக்கிய இதழான ‘ ராஜதந்திரம்’ ‘The Diplomat’ 03.01.2024 இல் யப்பான் பல்கலைக்கழகத்து அமைதிக்கும் முரண்பாடுகள் ஆய்வுக்குமான பேராசிரியர் மார்க் எஸ் கோகன் (Mark S Cogan) அவர்கள் வெளியிட்ட "இமாலயப் பிரகடனம் : தமிழ்க் குழுக்களிடை வெளிப்படையான ஆழமான பிளவை ஏற்படுத்தியுள்ளது-புலம்பெயர் குழுக்கள் உலகத் தமிழர் பேரவை பௌத்தத் துறவிகளுடனான உரையாடலில் தங்களைக் கலந்துரையாடாது தான்தோன்றித்தனமாக நடந்தமைக்கு முகத்தில் அறைந்துள்ளன" என்ற தலைப்பிலான கட்டுரை சிறப்பாக வெளிப்படுத்துகிறது. "உலகத் தமிழரமைப்பு உடன் சிங்களப் பௌத்த துறவிகள் உரையாடல் நடாத்திக் கூட்டாக வெளியிட்ட இமாலாயப் பிரகடனம் தமிழர்களிடை கிளர்ச்சியை உருவாக்கியுள்ளது. சிறிலங்கா ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த பிரகடனம் ஆறு விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது. 01. ஒரு பன்முகச் சமுதாயத்தை உருவாக்கல் 02. பொருளாதார வீழ்ச்சியை மேற்கொள்ளுதல் 03. தனியார் உரிமைகளையும் கூட்டு உரிமைகளையும் பொறுப்புறுதிப்படுத்தும் அரசியலமைப்பை உருவாக்கல் 04. சமய மற்றும் இனத்துவக் கூட்டங்களை ஏற்றுக்கொள்ளுதல் 05. நல்லிணக்கத்துக்கு உழைத்தல் 06. உடன்பாடான இருதரப்பு பலதரப்பு உடன்படிக்கைகளைச் செய்தல்.. இது உலகத் தமிழர் பேரவையின் ‘ தமிழர்களையும் அனைத்துலக சமுகத்தையும் ஏமாற்றுகின்ற செயல்நோக்கம் கொண்ட அரசியல் சூழ்ச்சி" எனவும் " ‘நடைபெற்றுக் கொண்டிருக்கிற அரசியல் கொடுங்கோன்மையை தொடர்ந்தும் நிலைநிறுத்தும் முயற்சி’ எனவும் 70 தமிழர் அமைப்புக்கள் கருத்து வெளிப்படுத்தியுள்ளன. இந்தப் பிரகடனத்தின் முக்கியமான உள்ளடக்கங்களைப் பார்க்கின்ற பொழுது அவை பலத்த விமர்சனத்துக்குரியனவாகவுள்ளன.

முதலில் பன்முகச் சமுதாயத்தை உருவாக்கல் என்பது வெறுமனே இனங்களுக்கிடை சமத்துவமென எழுதுகிற அரசியலமைப்பில் அல்ல இனங்களுக்கான சமநிலையான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குழப்பிய முறைகள் மாற்றப்பட்டு மீள்கட்டமைக்கப்பட வேண்டும். சிங்கள இனத்துவச் சர்வாதிகாரத்தை முன்னெடுக்கும் சிங்களக் கட்சிகளைக் கொண்ட சிறிலங்காப் பாராளுமன்ற முறைமையானது சிங்களப் பெரும்பான்மையினரின் ஆட்சியை முன்னிலைப்படுத்தி சிங்கள இனத்துவ தேசியத்தை அரசியல் நிகழ்ச்சி நிரலாகச் செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. மிலேனியம் பிறந்த 2000ம் ஆண்டில் நீல் டீவோட்டா (Neil Devotta) அவர்கள் பிரிட்டிஸ் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் பசுபிக் விடயங்கள் (Pacific Affairs) இதழில் வெளியிட்ட சிறிலங்கா குறித்த "சனநாயக்தைக் கட்டுப்படுத்தல், சிதைவுகளை நிறுவனப்படுத்தல், ஈழத்திற்கான தாகம் - சிறிலங்காவில் இனத்துவ முரண்பாட்டை விளக்கல்" (Control Democracy, Institutional Decay and the Quest for Eelam : Explaining Ethnic Conflict in Sri Lanka) என்னும் ஆய்வில் கூறிய சிங்களப் பெரும்பான்மையினருக்குச் சாதகமான கட்டுப்பாடுகள் கொண்ட சனநாயகமே நிலவுகிறது. இதனால் மற்றைய இனங்களுடன் நல்லிணக்கத் தீர்வுகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் தவிர்ப்பது மட்டுமல்ல சமத்துவமின்மைகளை ஏற்படுத்தக் கூடிய அதிகார வலுவாண்மைக் கட்டமைப்புக்களை வேண்டுமென்றே கட்டமைத்து சிங்களப் பெரும்பான்மை ஆட்சியைக் கட்டமைத்து அதனை யாருமே மீறாதவாறு பாதுகாத்து வருகின்றனர். ஆனால் உண்மையான சமத்துவமான ஆட்சி முறைமையினை உருவாக்குவதற்கு நல்லிணக்கம் தேவை. இருப்பினும் சிங்கள இனத்துவத் தேசியத்தை முன்னெடுப்பவர்கள் தங்கள் அழுத்தங்கள் மூலம் தாங்கள் முன்னேற்றம் அடையச் செய்துள்ள அதிகாரவலுவாண்மைகளைக் கைவிடாதவாறு தடுப்பதினால் அரசியலில் நல்லிணக்கத் தீர்வுகள் நடைமுறைச் சாத்தியமற்றதாகவே உள்ளன" என்பது பேராசிரியர் மார்க் எஸ் கோகனின் கருத்தாகவுள்ளது. இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்து ஈழத்தமிழர்களின் இறைமையைப் பலப்படுத்தல் மூலம் மலையக முஸ்லீம் மக்களின் அரசியல் உரிமைகளையும் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் அனைவரும் செயற்படும் ஆண்டாக 2024 அமையட்டும்.

**ஆசிரியர்**

# புதுவருட சவால்களை இலங்கை தாங்குமா?

அகிலன்

புதுவருட பிறப்பு என்பது பொதுவாக நம்பிக்கையைக் கொடுப்பதாகவே அமையும். ஆனால், இந்த வருடம் பிறந்த போது வெளிவந்த தகவல்கள் சாதாரண மக்களுக்கு அதிர்ச்சிகளைக் கொடுத்தன. விலை உயர்வுகள் குறித்த அறிவிப்புக்களுடன்தான் இந்த வருடம் பிறந்தது. ஜனவரி முதலாம் திகதி முதல் வற் வரி அதிகரிக்கப்பட்டிருப்பதுதான் இதற்குக் காரணம்!

பிறந்துள்ள ஆண்டு தேர்தல் ஆண்டு எனக் கூறப்பட்டாலும், நெருக்கடி மிக்க ஒன்றாக அமையப்போகின்றது என்பதைக் கட்டியம் கூறுவதாகவே இவை இருந்தன.

இலங்கை நெருக்கடியிலிருந்து மீள்கிறதா அல்லது மேலும் நெருக்கடிகளை நோக்கிச் செல்கின்றதா என்பது தெளிவற்ற ஒன்றாகவே இருக்கின்றது. ஒரு புறம் பொருளாதார நெருக்கடி, மறுபுறம் தேர்தல் எதிர்கொள்ளப்படுவதால், உருவாகியுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலை. இவற்றிடையே நம்பிக்கையைத் தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லை.




தேர்தல்கள் எவ்வாறிருந்தாலும், 2024 இல் அரசாங்கம் கடக்க வேண்டிய முக்கிய தடைகள் பல உள்ளன. கடந்த இரண்டு வருடங்களாகக் காணப்பட்ட நெருக்கடிகளின் தொடர்ச்சியாகவே இவை இருக்கப்போகின்றன. அவை எவ்வாறிருக்கும், அவற்றை வெற்றிகொள்ள முடியுமா? என்பது குறித்து இந்த வாரம் மேலோட்டமாகப் பார்ப்போம்.

தாங்க முடியாத கடன் சுமையுடன்தான் அரசாங்கம் உள்ளது. இந்தக் கடனைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் முக்கியமான ஆதாரங்களைப் பயன்படுத்துகிறது. அத்தியாவசிய சேவைகள் மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களிலிருந்து நிதியைத் திருப்புகிறது. கடன் மறுசீரமைப்பதும், நிதி ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதும் நீண்ட கால ஸ்திரத்தன்மை மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு முக்கியமானதாக இருக்கும். அரசாங்கத்துக்கு இது மிகப் பெரிய சவாலாகத்தான் இருக்கப்போகிறது.

பணவீக்கம் அதன் அபாயகரமான உச்சத்தில் இருந்து குறைந்தாலும், அது இன்னும் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய ஒன்றாகத்தான் உள்ளது, வாங்கும் சக்தியை அரித்து, பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடையூறாக பணவீக்கம் உள்ளது. பணவீக்கத்தை மட்டுப்படுத்துவதற்கும், செலவினங்களைக் கட்டுப்படுத்தவும், விநியோகச் சங்கிலித் தடங்கல்களைத் தீர்க்கவும், உள்ளூர் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் தொடர்ந்து முயற்சிகள் தேவைப்படும்.

பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தவும், வட்டிகளைக் கொடுப்பதற்கும் பெருமளவு நிதியை ஒதுக்க வேண்டியிருப்பதால், முதலீடுகளுக்கு அதிகளவு நிதியை ஒதுக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும் வரையறுக்கப்பட்ட ஒன்றாகத்தான் உள்ளது.

அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்து வருவதால், எரிபொருள் மற்றும் மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்துவது தவிர்க்கமுடியாததாகலாம். வெளிநாட்டு செலாவணியைப் பெறுவதற்கு மாற்று ஆதாரங்களைக் கண்டறிதல், இறக்குமதி செயல்முறைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஏற்றுமதியை ஊக்குவித்தல் ஆகியவை இந்த தடையைநிவர்த்திசெய்வதில்இன்றியமையாததாக இருக்கும். ஆனால், இதற்காக உருப்படியான திட்டங்கள் எதுவும் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கு சுற்றுலாத் துறையை மேலும் மேம்படுத்துவது அவசியம். உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் இலங்கையின் தனித்துவமான கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பான மற்றும் நிலையான சுற்றுலா தலமாக மேம்படுத்துதல் ஆகியவை அதன் மறுமலர்ச்சிக்கு முக்கியமானவை. இந்த இலக்கை அடைவதற்கான திட்டங்கள் சில அரசாங்கத்திடம் இருந்தாலும், அவை எந்தளவுக்கு வலிமையானவை என்ற கேள்வி உள்ளது.

அரசாங்கத் தலைமையில் அடிக்கடி ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் மற்றும் கொள்கை முரண்பாடுகள் முக்கியமான சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதிலும், கடனாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதிலும் முன்னேற்றத்தைத் தடுக்கின்றன. முதலீட்டை ஈர்ப்பதற்கும் வளர்ச்சிக்கு உகந்த சூழலை வளர்ப்பதற்கும் அரசியல் ஸ்திரத்தன்மையையும் பொருளாதாரக் கொள்கையில் ஒருமித்த கருத்தையும் உருவாக்குவது மிகவும் முக்கியமானது. ஆனால், ஆட்சி மாற்றம் ஒன்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இது எந்தளவுக்கு சாத்தியமானதாகும் என்ற கேள்வி உள்ளது.

இலங்கையில் அனைத்துத் துறைகளிலும், வேரூன்றிய ஊழல் மற்றும் அதிகாரத்துவ திறமையின்மை பல்வேறு துறைகளை பீடித்து, பொருளாதார முன்னேற்றம் மற்றும் மக்களின் நம்பிக்கைக்கு தடையாக உள்ளது. டிஜிட்டல் மயமாக்கல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல் ஆகியவற்றின்மூலம் இந்தப் பிரச்சினைகளை நேரடியாகச் சமாளிப்பது ஆரோக்கியமான மற்றும் திறமையான பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு இன்றியமையாததாக இருக்கும்.

இருந்த போதிலும், பொருளாதாரக் குற்றவாளிகள் என அடையாளம் காட்டப்பட்டவர்களே தொடர்ந்தும் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கின்றார்கள். இந்த நிலையில், ஊழலுக்கு எதிரான போராட்டம் எந்தளவுக்கு வெற்றிபெறும் என்ற கேள்வி இலங்கை அரசியலில் இருக்கத்தான் போகின்றது.

இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களை இலங்கை சார்ந்திருப்பது, உலகளாவிய விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சூரிய மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் முதலீடு செய்வது நீண்ட கால பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை அளிக்கும். அதற்கான திட்டங்கள் சில செயற்படுத்தப்பட்டாலும், அவை போதியனவாக இல்லை.

2024 இல் இலங்கையில் கணிசமான வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்க்க முடியுமா என்பது உறுதியான பதில் இல்லாத சிக்கலான கேள்வியாகும். பல காரணிகள் வெளிநாட்டு மூலதனம் நாட்டிற்குள் செல்வதை பாதிப்பதாக இருக்கின்றது.

செப்டம்பர் 2023 இல் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) பணியாளர் அளவிலான ஒப்பந்தத்தை எட்டுவது $2.9 பில்லியன் கடனைப் பெற வழிவகுத்தது. மற்றும் கூடுதல் நிதியுதவிக்கான கதவுகளைத் திறந்தது. IMF-ஆதரவு சீர்திருத்தங்களை திறம்பட செயல்படுத்துவது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் மற்றும் முதலீட்டை அதிகரிக்க வழி வகுக்கும். இருந்த போதிலும் அதனை சிறப்பாகச் செய்வதில் சில தடைகளை அரசாங்கம் எதிர்கொள்கிறது.




தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியை மேம்படுத்துதல் போன்ற சுற்றுலா மற்றும் பாரம்பரிய தொழில்களுக்கு அப்பால் பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துவதற்கான முயற்சிகள் புதிய துறைகளில் வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும். அதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் அடையாளம் கண்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள், குறிப்பாக சுற்றுலா மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைகளில், நீண்ட கால வருவாயை எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பது நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அவசியமானது.

உலகளாவிய மந்தநிலை அல்லது மோசமான புவிசார் அரசியல் பதட்டங்கள் இலங்கை போன்ற வளர்ந்து வரும் சந்தைகளுக்கான முதலீட்டாளர்களின் விருப்பத்தை குறைக்கலாம்.

திறமையற்ற அதிகாரத்துவம் மற்றும் உணரப்பட்ட ஊழல் ஆகியவை வெளிநாட்டு முதலீட்டைத் தடுக்கலாம். கவர்ச்சிகரமான முதலீட்டுச் சூழலை உருவாக்குவதில் நிர்வாகச் செயல்முறைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஊழலைத் தடுப்பது அவசியம்.

ஒட்டுமொத்தமாக, 2024ல் வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்கு ஈர்க்கக்கூடிய நம்பிக்கைக்குரிய அறிகுறிகள் காணப்பட்டாலும், கணிசமான சவால்கள் எஞ்சியுள்ளன. சீர்திருத்தங்களைச் செயல்படுத்துதல், அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் முதலீட்டாளர்களின் கவலைகளை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றில் அரசாங்கம் பெறக்கூடிய வெற்றிகள் புதிய ஆண்டில் அந்நிய மூலதன வரவின் அளவை தீர்மானிக்கும்.

2024 இல் இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால்கள் அச்சுறுத்தலானவை தான். ஆனால் சமாளிக்க முடியாதவையல்ல. சிறந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு முன்னுரிமை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## யாழ்ப்பாண 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் பண்பாட்டு

# இனஅழிப்பின் 50வது ஆண்டு

## மாநாட்டில் அன்று பங்குபற்றியிருந்த ஆய்வாளர் பற்றிமாகரன்

1974 ஜனவரி 10இல் ஈழத்தமிழரின் இறைமைக்கு எழுச்சியாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை சிறிலங்கா தனது பொலிஸ்படையினைக் கொண்டு பண்பாட்டு இனஅழிப்பாக மாற்றிய 50வது ஆண்டு 2024 ஜனவரி 10 ல் நிறைவு பெறுகிறது.

உலக வரலாற்றில் ஈழத்தமிழர்களின் யாழ்ப்பாண அரசு 13ம் நூற்றாண்டு முதல் 1621 வரையான தனியான அரசாகத் திகழ்ந்து வந்தது. இந்த யாழ்ப்பாண அரசின் இறைமையை 1621 இல் போர்த்துக்கேயர் கைப்பற்ற அது பின்னர் டச்சுக்காரரால் மீள்கைப்பற்றப்பட்டு இறுதியில் 1796 இல் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பெனியினரால் கைப்பற்றப்பட்டு 1802 இல் பிரித்தானிய முடிக்குரிய அரசால் இறுதியாகக் கைப்பற்றப்பட்டமை வரலாறு.

1802 முதல் 1948 வரை 146 ஆண்டுகள் பிரித்தானிய முடிக்குரிய அரசிடம் இருந்து வந்த ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிங்களவர்களின் இறைமையுடன் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றத்தில் ஈழத்தமிழர்களின் விருப்பு பெறப்படாது இணைத்து. 1948 இல் இலங்கைக்குப் பிரித்தானியக் காலனித்துவ அரசு சுதந்திரம் கொடுத்த பொழுது, அந்த சோல்பரி அரசியல் அமைப்பின் 29(2) பிரிவு மூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் சிறுபான்மை மதங்களுக்கோ இனங்களுக்கோ எதிரான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் பிரித்தானியப் பிரிவுக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யலாமென ஈழத்தின் சிறுபான்மையினருக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கியது. இதனால் ஈழத்தமிழர்களின் இறைமையின் மீயுயர் ஆட்சியாளராகப் பிரித்தானியாவே இலங்கைக்குச் சுதந்திரம் கொடுத்த பின்னரும் தொடர்ந்து இருந்து வந்தது.

இதனை உறுதி செய்யும் வகையில் இலங்கை தொடர்ந்தும் பிரித்தானிய காலனியாகவே உள்ளது என ரஸ்யா 1948 முதல் 1956 வரை இலங்கைக்குத் தனியான உறுப்புரிமையுள்ள நாடாக ஐக்கியநாடுகள் சபை ஏற்பதைத் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இரு தடவைகள் தடுத்தமை அமைகிறது. 1969இல் கோடீஸ்வரன் என்னும் தமிழ் எழுதுவினைஞர் சிங்களம் மட்டும் சட்டத்தினைக் கொண்டு வந்து தனக்கு வேலையிழப்பை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தியது சோல்பரி அரசியலமைப்புக்கு எதிரானது எனப் பிரித்தானியப் பிரிவுக் கவுன்சிலில் பதிந்த வழக்கை பிரித்தானியா ஏற்று 1969 இல் சிங்களம் மட்டும் சட்டம் சோல்பரி அரசியல் அமைப்புக்கு எதிரானது எனத் தீர்ப்பளித்ததின் மூலம் பிரித்தானிய முடிக்குரிய அரசு தானே ஈழத்தமிழர்களின் மீயுயர் இறைமையாளர்கள் என்பதை உலகுக்குத் தெளிவாக்கியது.

இந்நிலையில் மாட்சிமைக்குரிய 2வது எலிசபேத் மகாராணி தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தின் பெயரளவுத் தலைவியாக இருந்து வருவதை 1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பிரதமராகக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி இடதுசாரிகள் கூட்டணி அரசாங்கம் ரத்து செய்து தன்னிச்சையாக சிங்கள பௌத்த சிறிலங்கா குடியரசு என்ற அரசியலமைப்பைப் பிரகடனப்படுத்தி சோல்பரி



அரசியலமைப்பை வன்முறைப்படுத்தியது. இதனால் அரசற்ற தேசஇனமாக்கப்பட்ட ஈழத்தமிழர்களிடம் பிரித்தானிய அரசால் கைப்பற்றப்பட்டு 170 ஆண்டுகள் அவர்களிடம் இருந்த ஈழத்தமிழர்களின் இறைமை மக்கள் இறைமையாக அவர்களிடமே மீண்டது. இந்த மக்கள் இறைமையின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்கும் தேச நிர்மாணத்தைத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் பயணித்துக் கொண்டிருக்கையிலேயே 4வது உலகத் தமிழராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் மக்களின் மதிப்பலத்திலும் நிதிப்பலத்திலும் 1974 ஜனவரி 3 முதல் 9 வரை ஈழத்தமிழர்களின் இறைமையின் எழுச்சிப் பெருவிழாவாக ஊரெங்கும் வாழைகள் தென்னைகள் நட்டு மாவிலை தோரணங்களால் அலங்கரித்து பெரும் பண்பாட்டு மீட்டுணர்வுப் பெருவிழாவாக மக்கள்கடலெனத்திரண்ட மகிழ்ச்சிப் பெருக்குடன் நடைபெற்றது.




ஜனவரி 9ம்நாள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரான யாழ்ப்பாண மேயர் அல்பிரெட் தங்கராசா துரையப்பா ஊர்வலத்திற்கு அனுமதி மறுத்து மின்சாரக்கம்பங்களுக்கான மின்னிணைப்பையும் நிறுத்த மறுத்ததினால் மாநாட்டு ஊர்வலத்தின் அலங்கார வளைவு மின்சாரக் கம்பங்கள் மின்கம்பிகளில் முட்டியதால் ஏற்பட்ட மின்சார ஒழுக்கில் அலங்கார வாகனத்தில் இருந்த இரு அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்தனர். மறுநாள் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கான விருதுவழங்கும் நன்றி விழாவிற்கு யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் அதனை நடத்த அனுமதித்து விட்டு அந்த மண்டபத்துள் நுழைவதற்கான சாவிகளை யாழ்மாநகரசபை துரையப்பாவின் ஆணையின் கீழ் கொடுக்க மறுத்ததால் வீர சிங்கம் மண்டபத்துக்கு அருகில் வெளியே நன்றி நவிலும் கூட்டம் நடைபெற்ற பொழுது திட்டமிட்ட முறையில் சிறிலங்கா பொலிசார் ஏ எஸ் பி சந்திரசேகராவின் ஆணயின் கீழ் மக்கள் திரளுக்கிடை புகுந்து ஆயுதப்பிரயோகம் செய்து மினகம்பிகளைச் சுட்டு வீழ்த்தியதால் மின்சார ஒழுக்கால் மேலும் 9 அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்தனர். அத்துடன் தமிழ்ப்பெண்களை ஆடைகளைக் களைந்து மானபங்கப்படுத்தி மக்கள் மேல் கண்டபடி அடிதடி நடாத்தி சிறிலங்காப் பொலிசார் மக்கள் மேலான யுத்தத்தை ஈழத்தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் உட்புகுந்து தொடக்கினர்.

மக்கள் இந்தப் பண்பாட்டு இனஅழிப்பைத் தொடக்கிய பொலிசாரை எதிர்த்துப் போராடி சில பொலிசாரை அருகில் இருந்த றீகல் தியேட்டர் குளத்துக்குள் தூக்கி வீசி சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிரான ஈழத்தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தை வரலாற்றில் முன்னெடுத்தனர். அந்த முன்னெடுப்பினைத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் மரபு வழி மக்கள் இராணுவமாக கட்டி எழுப்பி 1978 முதல் 2009 வரை உலகே வியக்கும் ஈழத்தமிழர் நடைமுறையரசு 31 ஆண்டுகள் உலக வரலாற்றில் பதிவாகிடச் செய்தார். 10.01.2024 ஈழத்தமிழர்களின் அந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தொடக்கத்தின் பொன்விழாவாண்டாக அமைகிறது. அன்று யாழ்ப்பாணத்தில் ஈழத்தமிழர்களின் பண்பாட்டை அழிக்க சிறிலங்கா தொடங்கிய இனஅழிப்பின் பரிணாமமாக கடந்த 50 ஆண்டுகளாக உலகெங்கும் அரசியல் புகலிடம் பெற்று அந்நாடுகளின் குடிமக்களாகி விட்ட ஈழத்தமிழர்கள் இன்று கனடாவிலும் இலண்டனிலும் தைமாதத்தைத் தங்கள் பண்பாட்டின் பெருமைகளை உலக மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் தமிழ் மரபுரிமை மாதமாகக் கொண்டாடுவது ஆக்கிரமிப்புச் சிறிலங்கா அரசாங்கம் விரைவில் ஈழத்தமிழர்களின் தாயகத்தை விட்டும் விரட்டியடிப்பதற்கான ஈழத்தமிழர் தன்னாட்சி நடைமுறைச் சாத்தியமாகும் என்பதற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

• • •

விமானம் தீப்ப ... தொடர்ச்சி ...

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொருட்களை கொண்டு செல்லவிருந்த விமானமாகும்.

இந்த விபத்தில் பயணிகள் விமானம் தீப்பற்றி எரிந்தபோதும், விமானத்தின் உள்ளக தொலைதொடர்பு கருவிகள் சேதமடைந்ததால் விமானிகள் விமானம் தீப்பிடித்ததை அறியவில்லை. விமானப் பணியாளர் ஒருவரே அதனை அவர்களுக்கு தெரியப்படுத்தினார்.

379 பயணிகள், 3 விமானிகள் மற்றும் 12 விமானப் பணியாளர்கள் அந்த விமானத்தில் இருந்தபோதும் எல்லோரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டது மிகுந்த ஆச்சரியங்களை ஏற்படுத்தியுள்ளது. பயணிகள் அனைவரும் அச்சமடையாது விமான பணியாளர்களின் கட்டளைகளை ஏற்று நடந்ததால் அது சாத்தியமானதாக தெரிவிக்கப்படுகின்றது.



# இளைஞர்களை கிளர்ந்தெழ வைத்த தமிழாராய்ச்சி மாநாட்டுக் கொலைகள்



## சி.வி.கே.சிவஞானம்; 50 வருட நினைவுகள்

**இலங்கைத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில் திருப்புமுனை ஒன்றை ஏற் படுத்திய யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் இடம்பெற்று 50 வருடப் பூர்த்தி இந்த வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 1974 ஜனவரி 3 முதல் 9 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற இந்த மாநாட்டின் இறுதி நாள் பொலிஸாரின் செயற்பாட்டினால் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகளை நேரில் பார்த்தவர்களில் ஒருவரான வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவர்கள் அது தொடர்பாக உயிரோடைத் தமிழின் தாயக களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலின் முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காகத் தருகின்றோம்.**

**1974 தமிழாராய்சி மாநாட்டுப் படுகொலைகள் இடம்பெற்றன. யாழ். மாநகர சபையில் பணியாற்றிக்கொண்டிருந்த நிலையில், இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்களில் நீங்களும் ஒருவர். அன்றைய தினம் என்னதான் நடைபெற்றது?**

வீரசிங்கம் மண்டப முன்றலில்தான் அந்த நிகழ்வு இடம்பெற்றது. இச்சம்பவம் இடம்பெற்ற போது அதற்கு அருகில் உள்ள முனியப்பர் கோவிலடியில், நானும் என்னுடன் பணிபுரியும் சிலரும் நின்றிருந்தோம். அப்போது இந்தியாவிலிருந்து வந்திருந்த நயினா முகமத் உரையாற்றிக்கொண்டிருந்தார். அப்போது அந்த மண்டபப் பகுதியை நோக்கி பொலிஸ் குழு ஒன்று நடந்து சென்றதை நான் பார்த்தேன். சந்திரசேகர என்பவர் தலைமையிலான அந்த பொலிஸ் குழு, பொலிஸ் நிலையப் பகுதியிலிருந்து வீரசிங்கம் மண்டபத்தை நோக்கிச் சென்றது.

மண்டபத்துக்கு அண்மையில் அவர்கள் வந்தபோது வாக்குவாதங்கள் இடம்பெற்றதையும் காணமுடிந்தது. இந்தப் பகுதியில் இருந்த மக்களை அப்புறப்படுத்தி தொடர்ந்து செல்வதற்காக பொலிஸார் முற்படுகின்றார்கள் என்பதும் தெரிந்தது. பின்னர் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதையும் அவதா னிக்க முடிந்தது. இதன்போது மின்சாரக் கம்பிகளும் அறுந்து விழுந்தன. அதனால், மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. இதன்போது அந்த இடத்திலேயே சிலர் இறந்தார்கள். சிலர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது மரணித்தார்கள். இந்த நிகழ்வுகளை நான் பார்க்கக்கூடியதாக இருந்தது.

அந்த நிகழ்வின் போது பெருந்தொயையான மக்கள் அங்குகூடியிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சந்திரசேகர தலைமையிலான பொலிஸாரே இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தியவர்கள். பொதுமக்களுடைய மரணங்களும் அவர்களுடைய செயற்பாடுகளாலேயே ஏற்பட்டது என்பதையும் என்னால் பார்க்கக்கூடியதாக இருந்தது.

**இந்த மாநாட்டுக்கு வெளிநாடுகளிலிருந்தும் தமிழ் அறிஞா்கள் பலர் வந்திருந்தார்கள். ஒரு சிலருக்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது. இதற்கு என்ன காரணம்?**



இந்த மாநாட்டுக்கான ஏற்பாட்டுக் குழுவில் பேராசிரியர் வித்தியானந்தன் முக்கிய பங்கெடுத்திருந்தார். இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு எதிராக அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் தீவிரமான முயற்சிகளை முன்னெடுத்திருந்தது. இந்தத் தடைகளை மீறித்தான் தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்பட்டது. அது ஒரு கோலாகலமான மாநாடாகத்தான் நடைபெற்றது.

அரசியல் பின்னணியைப் பொறுத்தவரையில், அரசாங்கம் இதற்கு ஆதரவாக இருக்கவில்லை. இதனை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் தீவிரமாக இருந்தது.

இந்தப் பின்னணியில்தான் இந்தியாவிலிருந்து வந்திருந்த நயினா முகமத் உரையாற்றிக் கொண்டிருந்த போது, சந்திரசேகரா தலைமையிலான பொலிஸ் குழு பொதுமக்கள் மத்தியில் புகுந்து தாக்குதலை நடத்தியது.

**இந்தத் தாக்குதல் மக்கள் மத்தியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது?**

மக்கள் மத்தியில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. அப்போது மேயராக இருந்த துரையப்பாவுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பிருக்கலாம் என்றும் மக்கள் மத்தியில் கருத்துக்கள் இருந்தது. மறுநாள் நான் அலுவலகம் சென்ற போது, மாநாகரசபைக்கு முன்பாக பெருமளவு மக்கள் கூடியிருந்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். அவர்களுடன் நானும் இணைந்துகொண்டேன். கொல்லப்பட்டவர்களுக்கு எமது அனுதாபத்தையும், ஆட்சேபனையையும் அதன்போது நாம் வெளிப்படுத்தியிருந்தோம்.

பரவலாக அதிர்ச்சியும், ஆட்சேபனையும், அஞ்சலிகளையும் குடாநாடு முழுவதிலும் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக யாழ். மாநகரப் பகுதிகளில் அதனை அதிகளவுக்குக் காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளையில், இது தொடர்பான செய்திகள் சர்வதேச மட்டத்துக்குச் சென்ற போது, அது தொடர்பான ஆட்சேபனைகள் சர்வதேச மட்டத்திலிருந்தும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்களுக்கான அனுதாபம் மட்டுமல்ல, அரசாங்கத்துக்கு எதிரான உணர்வுகள்தான் அப்போது பெரிதாகத் தெரிந்தது. இது ஒரு தமிழாராய்சி மாநாடு. ஏற்கனவே இவ்வாறான மாநாடுகள் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் நடைபெற்றிருக்கின்றது. இப்படியான ஒரு நிகழ்வை எமது தாயகத்தில் மரண ஓலங்களுக்கு மத்தியில் நடத்த நேரிட்டது, மிகப்பெரிய எதிர்ப்பு அலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. உலகம் முழுவதிலுமே அந்த எதிர்ப்பு இருந்தது. ஆனால், யாழ்ப்பாணத்தில் இது உச்ச நிலையில் இருந்தது.

**தமிழ் மக்களுடைய அரசியல் போக்கில் கூட இந்தப் படுகொலைகள் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக, தமிழ் இளைஞா்கள் ஒரு தீவிரமான போக்கில் செல்ல வேண்டும் என முடிவெடுப்பதற்கு இந்தச் சம்பவம் எந்தளவுக்குப் பங்களித்திருக்கின்றது?**

நிச்சயமாக இது முக்கியமான ஒரு காரணமாக இருந்திருக்கின்றது. குறிப்பாக காவல்துறை அதிகாரியான சந்திரசேகரவை குறிவைத்து சிவகுமாரன் செயற்படுவதற்கும் இந்தச் சம்பவம் காரணமாக இருந்திருப்பதாகவே சொல்லப்படுகின்றது. தமிழ் இளைஞர்களை வன்முறையை நோக்கித் தூண்டிவிட்டமைக்கு இந்தப்படுகொலைகள் காரணமாக இருந்திருப்பதாகவே நான் நினைக்கிறேன்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பண்பாட்டு இனப்படுகொலை என்பதற்கு வலுவான சான்று

ஓர் இனத்தின் பண்பாட்டுக்கூறுகளைத் திட்டமிட்ட ரீதியில் முற்றாக அழித்தல், சிதைவுக்குட்படுத்தல், மாற்றுதல் போன்றவற்றை மேற்கொள்ளுதல் பண்பாட்டு இனப்படுகொலை என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. நன்கு விழுதெறிந்த ஆலமரமொன்றை அடியோடு வெட்டுவதற்கு, முதலில், அதன் விழுதுகளை அறுப்பதைப் போன்றதே இந்தப் பண்பாட்டுப் படுகொலை. அந்தவகையில் ஓர் இனம் கொண்டிருக்கும் பண்பாட்டுக்கூறுகளான மொழி, சடங்குகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் கூட்டாகவோ, ஒவ்வொன்றாகவோ அழித்தலைப் பண்பாட்டுப் படுகொலையாகக் கொள்ளமுடியும்.



விழாக் கோலத்தில் யாழ் நகர் 1974 தை

அப்படி நோக்கினால், ஈழத்தமிழினத்தின் மிக முக்கிய பண்பாட்டு அடையாளங்களில் ஒன்று அவர்கள் கொண்டிருக்கும் செழுமைமிகு தமிழ் மொழி. சிறீலங்கா என்னும் தீவு தனிச் சிங்களத் தேசமாக உருக்கொள்ளத் தொடங்கியபொழுதினில், அது மேற்கொண்ட முதற்செயற்றிட்டம், தொன்மையும் – செழுமையும் மிக்க தமிழ் மொழியை புறக்கணித்தமைதான். 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா அரசு கொண்டு வந்த தனிச்சிங்கள சட்டமானது, இத்தீவில் தமிழ் பண்பாட்டு இனப்படுகொலையைத் தொடக்கி வைத்தது. அதன் தொடர்ச்சியின் கோரமுகத்தினை 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி ஈழத்தமிழர்கள் எதிர்கொண்டனர்.

எவ்வித அரசியல் கலப்புமற்று – அரசியல் நோக்கமுமற்று தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மாத்திரம் செயற்படும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமானது, தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியின் பயனால் 1964 ஆம் ஆண்டிலிருந்து தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்திவருகின்றது. இதன் முதலாவது மாநாடு டில்லியில் இடம்பெற்றது. நான்காவது மாநாடு 1974 ஆம் ஆண்டு ஈழத்தின் யாழ்ப்பாண நகரில் இடம்பெற தீர்மானிக்கப்பட்டது. பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவென இந்தியா, தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், யப்பான் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து அறிஞர் பெருமக்கள் கலந்துகொள்ளவும், தமிழ் மொழி தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவும் தயாராயிருந்தனர்.

தமிழ் மொழியின் வளர்ச்சி மீது காழ்ப்புணர்வு கொண்டிருந்த சிறீலங்கா அரசு இந்நிகழ்வுக்கு ஆரம்பம் முதலே முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி வந்தது. அந்தக் காலப்பகுதியில் தமிழரசுக் கட்சிக்கும், அரசுக்குமிடையில் ஏற்பட்டிருந்த முரண்நிலையை சாட்டாகப் பயன்படுத்தி, மொழிசார் மாநாட்டைக் குழப்ப, நேரடியாகவும், மறைமுகமாகவும் திட்டங்களை வகுத்தது.

மாநாட்டின் ஏற்பாட்டுக்குழுவினர் அதற்கான அனுமதியினை சிறீலங்கா அரசிடம் கோரியபோது, "..ஜனவரியில் இடம்பெறவிருக்கும் தமிழாராய்ச்சி மாநாடு, அனைத்துலகத்தையும் தழுவியுள்ள, அனைவத்துலக மாநாடு என்பதால், அது இலங்கையின் தலைநகரிலேயே இடம்பெற



ஜெயராஜா துரைராஜா

வேண்டும். அப்படி நடந்தால் மட்டுமே அரசு அதற்கு ஒத்துழைப்பும், ஆதரவும் அளிக்க முன்வரும்.." எனப் பதில் வழங்கினார் அப்போதைய பாதுகாப்பு – வெளிவிவகார பதில் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி.

பின்னர் அந்த விடயத்திலிருந்து அரசு பின்வாங்கியபோதிலும், வெளிநாட்டுப் வருகையாளர்களுக்கான வீசாவை வழங்க மறுத்துவந்தது. மாநாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களின் வருகையை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குக் கட்டுப்படுத்தி, மாநாடு இடம்பெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வீசா அனுமதியை சிறீலங்கா அரசு வழங்கியது. அடுத்தடுத்த சந்ததியினருக்கும் தமிழ் மொழியின் சிறப்பும், தமிழாராய்ச்சி மாநாட்டின் முக்கியத்துவமும் சென்றுசேரும் நோக்குடன் மாநாட்டுக் குழுவினர் பாடசாலை மாணவர்களுக்கான கொடிவாரத்தினை ஆரம்பித்தனர். அந்தக் கொடியினைப் பாடசாலை மாணவர்கள் யாரும் வாங்கி அணியக்கூடாதென தடைசெய்தது சிறீலங்கா கல்வி அமைச்சு.

சமநேரத்தில் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், உள்நாட்டுப் பத்திரிகைகள் மூலமாகவும், யாழ்ப்பாணத்தில் கொலரா நோய் பரவல் அதிகரிப்பதால், நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குழுவினர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து மோதல்களால், பலர் தம் பதவிகளைத் துறந்துள்ளதால், மாநாடு இடம்பெறாது எனவும் பரப்புரைகளை அரசு முன்னெடுத்தது.

இந்தத் தடைகள் எதனையும் பொருட்படுத்தாமல், ஈழத்தமிழ் மக்கள் தமிழாராய்ச்சி மாநாட்டை சிறப்பிக்க திரட்சி பெற்றதை அறிந்த அரசு, தமிழ் துரோகிகளைக் களமிறக்கியது. நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் அருளம்பலம், "தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டு அறிஞர்களுக்கு வீசா வழங்கக்கூடாது. தமிழாராய்ச்சி மாநாட்டையே தடைசெய்துவிட வேண்டும்.."என முழங்கினார். அப்போதைய அரச எடுபிடியாகச் செயற்பட்டு பல்வேறு தமிழர் விரோத செயற்பாடுகளை முன்னெடுத்து வந்த முன்னாள் யாழ்.நகர மேயர் அல்பிரட் துரையப்பா, இறுதிக்கட்ட குழப்பங்களில் ஈடுபட்டார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தையும், யாழ்.திறந்தவெளி அரங்கையும் தமிழாராய்ச்சி மாநாட்டு ஏற்பாட்டுக்குழு அப்போதைய அல்பிரட் துரையப்பாவிடம் கோரியபோது, அதற்கு உடன்பட்டிருந்ததோடு, இடங்களை எடுத்துக்கொள்ளவும் அனுமதித்திருந்தார். பின்னர் மாநாட்டுக்குழுவின் தலைவர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுடன் இடம்பெற்ற உரையாடலில், "பொதுமக்கள் அபிப்பிராயம் பற்றி நீர் எனக்குச் சொல்லுகிறீர். எனக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்பு பொது மக்களுடன் உண்டு. நீர் இன்று வந்து, எனக்கு உபதேசம் பண்ணுகிறீர். திறந்தவெளி அரங்கு பொதுமக்களுக்குரியதாயினும், அதனை வழங்கும் அதிகாரம் எனக்குண்டு. நான் தரமாட்டேன். நீங்கள் வேறிடம் பார்த்துக்கொள்ளுங்கள்.."எனக் எக்காளமிட்டார்.

இத்தனை தடைகளையும் கடந்து நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு, யாழ். நகரத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெற்றது. 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ஆம் திகதி தொடக்கம் 09 ஆம் திகதி வரை இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வானது 10 ஆம் திகதி முற்றவெளி அரங்கில் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. அந்நிகழ்வில் கலந்துகொள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் திரண்டிருந்தனர். அப்போது என்ன நடந்தது என்பதை, மாணிக்கவாசகம் ஆணைக்குழுவில் சாட்சியமளித்த புங்குடுதீவைச் சேர்ந்த திரு. சோதிலிங்கம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"..பேராசிரியர் நயினார் முகம்மது தமிழ் மொழியையும், தைப்பொங்கலையும் சம்பந்தப் படுத்திப் பேசிக்கொண்டிருந்தார். சனங்கள் மிக அமைதியாக இருந்து அதனை ரசித்தனர். நான் பல கூட்டங்களுக்குப் போயிருக்கிறேன். அப்படி அமைதியாக இருந்து சனங்கள் கேட்டு ரசித்த கூட்டத்தை இதுவரை காணவில்லை.."



ர்வலத்தில் இறந்த இருவரின் உடல்

"..அப்போது கிழக்குப் பக்கமாக ஏதோ ஆரவாரம் கேட்டது. சனங்களை அமைதியாக இருக்குமாறு நயினார் முகம்மது கேட்டுக் கொண்டார். என்ன குழப்பமாக இருக்கலாமென்று அவதானிக்க அருகே சென்றேன். பொலிஸ் வாகனம் வந்திருப்பதையும், வீதியை விட்டு சனங்கள் விலகுவதையும் கண்டேன்.."

"..இதனால்தான் அங்கு சலசலப்பு ஏற்பட்டிருக்கவேண்டும். வீதியை விட்டு விலகி வாகனத்திற்கு வழிவிடுமாறு சனங்களை நானும் கேட்டேன். சனங்கள் பொலிஸாரைக் கண்டு எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை. அவர்கள் அங்கு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

பகுதி 2

# முயற்சி செய்தால் முன்னேறலாம், சுயதொழில் முயற்சியாண்மை

## பெண் மணியின் கடந்து வந்த பாதை

ஹஸ்பர் ஏ ஹலீம்

ஒரு சாதாரண பெண்ணாக இருந்து கணவனின் சிறிய சதுர உதவி மூலமாக அன்றாட ஜீவனோபாயத்துக்காக இப்படியான தாய் செயற்படுவது வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டு கொள்வதற்கே.

சமூகத்தில் பல இன மக்கள் வாழ்கின் றார்கள் எந்த சமூகமாயினும் வறுமை நிலையை போக்க பெண்களும் முன்னிற்பது வரவேற்க தக்கது.



பெண்கள் தலைமைத்துவம் தாங்கும் குடும்பங்கள் சுயதொழிலில் காணும் முன்னேற் றத்தை விட விஜயபாரதியின் எதிர்கால கனவு நனவாகும் என்பது இங்கு இவரது தொழிலை வைத்து பார்க்கும் போது எமக்கு தெரிகிறது.

முதலில் கணக்கு பார்ப்பது தெரியாது பிறகு பிரதேச செயலக துறை சார் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வரவு செலவு பேணுவது தொடர்பில் பயிற்சி அளித்தார்கள்.

இதன் பின்பே அவள் வரவு செலவு கணக்கு விபரத்தை எழுதி இலாபத்தை சேமித்து வந்தாள். மாவட்டத்தின் பல சிறிய கடைகள் உட்பட பல இடங்களுக்கும் குறித்த உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகிறது.

அரச ஊழியர்கள் தூரம் பாராது அருகாமை யில் இருந்து வீட்டுக்கு வந்து கொள்வனவு செய்வார்கள்.

இவ்வாறாக தனது இரு கைகளாலும் உழைக்கும் பெண்ணாக காணப்படும் இந்த பெண் பல பயிற்சிகளில் பங்கேற்பதும் உண்டு.

தனது கிராம பிரச்சினை, தொழில் பிரச்சினைகள் தொடர்பில் அவ்வப்போதான நிகழ்வுகளில் கதைப்பதுண்டு. சிறுகைத்தொழில் பிரிவு,விதாதா வளநிலையம் ஊடாக அரச துறை மூலமாக உற்பத்திக்கான சந்தை வாய்ப்பும் கிடைக்கப்பெற்று வருகின்றது. மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலமான வழிகாட்டல்களும் கிடைப்பதுண்டு.

இது போன்ற அரச துறை சேவைகள் மூலமான உதவிகளும் வழிகாட்டல்களும் அப் பெண்ணுக்கு கிடைப்பது மேலும் ஒரு வகையில் சக்தி மிக்கதாக தொழிலை ஊக்குவிக்கின்றது. போக்குவரத்து சேவையை பெற்றுக் கொள்ள மிக நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டும் பிரதான வீதியை நோக்கி.



நடந்து சென்றதன் பின்னே பிரதான வீதியை அடைந்ததும் பஸ் சேவை இடம் பெறுகின்றன. பனை அபிவிருத்தி சபை மூலமான உற்பத்திகளும் சங்கம் ஊடாக இக் கிராமத்தின் பிரதான வீதியில் உள்ள கட்டடத்தில் கடை ஒன்றும் உள்ளது. விஜயபாரதியான பெண்மணி இதன் மூலமும் நன்மையடைகிறாள். பயிற்றப்பட்ட பல பயிற்சியாளர்கள் கைப்பணி உற்பத்தி துறை மூலமாக இக் கிராமத்தில் உள்ளார்கள்.

தனது சொந்த முயற்சி மூலமாக தொடர்ச்சியான சுயதொழில் முன்னேற்றத்தை அடைந்து வருபவரும் இவரே. “உற்பத்திகளை இன்னும் அதிகரிக்க வேண்டும் இதற்கான மூலதனம்தேவை இருந்த போதிலும் நான் கடந்த காலங்களை விடவும் தற்போது முன் னேற்றமடைந்துள்ளேன் “ எனவும் உற்பத்தி முறை தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தார்.

யுத்த காலத்தின் போது பல துன்பங்களை அனுபவித்திருக்கிறாள் அப்போது உடுத்திய உடையுடன் உண்ண உணவின்றி நிம்மதியாக தூங்க முடியாது இடம் பெயர்ந்த வரலாறும் உண்டு. அதே காலப் பகுதியில் கணவனை இனந்தெரியாத நபர்கள் கடுமையாக தாக்கியதனால் தற்போது முதுகெலும்பு பாதிக்கப்பட்டு ஆறாத வடுக்களாக முடங்கி இருக்கிறார். ஏதோ எப்படியானாலும் குடும்பத்துக்கு சோறு போட வேண்டும் என்ற நிலையை எப்படியாவது செய்தே ஆக வேண்டும்.

இதனால் அரிசியை கொண்டு அதனை கையால் மாவாக்கி விற்பனை செய்தாள். அதன் படிப்படியான வளர்ச்சி அவளை நவீன தொழில் நுட்பத்துக்கு இட்டுச்சென்றது. தற்போது கஷ்டங்களுடன் வாழ்ந்தாலும் குடும்பத்தை தனது வருமானம் மூலமாக வறுமைநிலை நிலைக்கு இல்லாமல் வாழ்கிறாள்.



காலம் செல்லச் செல்ல தற்கால சூழ் நிலையில் அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் நீர் மின்சாரம் போன்ற கட்டணங்களுக்கான அதிகரிப்பு என பல சுமைகள் காணப்பட்டாலும் உழைக்கும் ஒரு பகுதியில் அதனை செலுத்தி வருகிறாள்.

“தான் செய்து கொண்டிருக்கும் சுயதொழிலில் கூலி ஆட்கள் இல்லாமல் செய்தால் மேலதிகமான இலாபத்தை பெற முடியும் என கூறிய அவள் அப்படி இருந்தால் இலகுவானதாகவும் விரைவானவினைத்திறனுடன் கூடிய உற்பத்திகளை மேற்கொள்ளலாம்” என உற்பத்தியின் நோக்கம் தொடர்பில் தெரிவித்தார். பல பெண்கள் கணவனை இழந்த நிலையில் பெண் தலைமைத்துவம் தாங்கும் குடும்பங்களாக காணப்படுகிறார்கள்.

இவர்களில் பலர் சுயதொழில் செய்ய முடியாத நிலையில் வருமானமற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

அவர்களுடன் ஒப்பிடுகையில் இப் பெண்மணி என்பவர் மதிப்பு மிக்கவளாக உள்ளார். பெண்கள் “மென்மையானவர்கள்” என கூறுவார்கள் அதற்கேற்றவாறு அவள் செயற்படுகிறாள். மதிப்பும் மரியாதையும் பெண்களிடத்தில் உயரதிகாரிகளும் அரசியலில் இவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் தொழிலுக்கான முன்னுரிமை நாட்டில் அதிக பட்ச சம்பளத்துடன் விசேடமாக வழங்க வேண்டும்.

ஏனைய நாடுகளில் வழங்கப்படும் விசேட சலுகைகளை இவள் போன்ற பெண்ணுக்கும் வழங்குவதன் ஊடாக கௌரவத்தை வழங்க முடியும். பல தடைகளை தாண்டி பல சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னேறும் இவளை முடி சூடி பட்டம் கௌரவிப்புக்களை செய்து கொள்வதனால் மேலும் சுயதொழிலை ஊக்கப்படுத்தலாம்.

தினம் தினம் குடும்பத்தையும் தனது பிள்ளைகளின் எதிர் காலம் பற்றியும் ஆழமாக சிந்திப்பவள். தங்களது கிராமம் ஒரு நெற் செய்கை, தோட்டச் செய்கைக்கு பெயர் போனது. சகல வளங்களையும் இயற்கையாக கொண்டுள்ளதுடன் அருகாமையில் குளத்து நீர் போன்றன காணப்படுகிறது. தனது சுயதொழில் முன்னெடுப்புக்கு ஆரம்ப கட்டங்களில் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக எரிபொருள் பற்றாக்குறையால் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

வீதிகளில் மக்கள் போராட்டம் செல்ல முடியாத நிலை இதையும் தவிர்த்து பொதுவாக சந்தைப்படுத்தலை அந்த நேரத்திலும் தூர இடங்களுக்கு செல்லாமல் துவிச்சக்கர வண்டி, நடை பயணம் மூலமாக விற்பனை செய்து வருமானமீட்டினார். தன்னால் எப்படியாவது சமாளித்து குடும்பத்தை காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு உள்ளது. இதனால் தொழிலை சுயமாக ஆர்வத்துடன் மேற்கொண்டு வருகின்றார்.

இது போன்ற தொழில்களை ஏனைய பெண்களும் செய்தால் நல்லதொரு வருமானத்தை வீட்டில் இருந்தே ஈட்டமுடியும் எனவும் அவளது எதிர்பார்ப்பாக காணப்படுகிறது. இவ்வாறான சுயதொழில் முயற்சியாண்மையாளர்களை ஊக்கு விப்பதன் ஊடாக வறுமையற்ற தேசத்தை கட்டி யெழுப்ப முடியும்.

மற்றவர்களின் உதவியை எதிர்பார்க்க தேவையில்லை “எனது கணவனுக்கு முதுகெலும்பு பாதிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாது எனது முயற்சியால் 10 கிலோ கிராம் அரிசியை கையால் இடித்து பார்த்தேன் அரிசி மாவாக ஆக்கினேன் அதனை சந்தைப்படுத்தினேன் நல்ல விற்பனையாகியது அதன் பின் தொழிலை ஆர்வமாக ஆரம்பித்து வருமான மீட்டி மா அரைக்கும் இயந்திரத்தை சொந்தமாக பணம் கொடுத்து வாங்கினேன்” என அந்த பெண்ணின் முயற்சியால் தனி ஒருவராக நின்று இவ்வாறு தொழில் முன்னேற்றம் கண்டு வறுமையற்ற நிலையில் அதிக இலாப மீட்டலுடன் வாழ்ந்து சாதனை பெண்ணாக மாறிய பெருமையும் வரலாறு ஏடுகளில் பதியப்பட வேண்டும்.

தனக்கு இயலுமான துறைகள் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் பல காணப்பட்டாலும் இதனையே அதிகமாக நேசிப்பவள். ஒரு தாயாக மாத்திரமல்ல தொழில் துறையில் சிறந்த பெண் முயற்சியாண்மையாளராக ஈடுபாடு காட்டும் இப் பெண் தேசிய மட்டத்தில் மிளிர வேண்டும். நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு இவ்வகையான பெண்களின் உழைப்பு எடுத்துக்காட்டத்தக்கது.

வியர்வை சிந்தி கடினமான உழைப்பால் தனி ஒரு கடை அறையை கூட இலாப பணத்தில் வீட்டின் காணிக்குள் அவள் கட்டியுள்ளார்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தமிழர் பகுதகளில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில்

# இலஞ்சம் தலைவிரித்தாடுகின்றது

மட்டு.நகரான்

புதியவருடம் பிறந்திருக்கின்றது. ஆங்கில வருட பிறப்பு தினத்தன்று மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகத்தில் காலையில் ஊழியர்கள் வருட ஆரம்ப உறுதிமொழி நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அங்கு வந்த ஒப்பந்தகாரர் ஒருவர் அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் தலா 20ஆயிரம் ரூபா வீதம் கடித உறையில் வைத்து வழங்கியுள்ளார்.




ஒரு அலுவலக நேரத்தில் அதிலும் முக்கிய அரச அலுவலகத்தில் அதுவும் மட்டக்களப்பில் இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளதானது இந்த நாட்டில் மட்டுமல்ல தமிழர்கள் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு இலஞ்சம் எவ்வாறு தலைவிரித்தாடுகின்றது என்பது வெளிப்படையாக தெரிவிக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவற்றினை திசை திருப்பும் வகையிலான பல்வேறு செயற்பாடுகள் அரசாங்கத்தினாலும் அரசாங்கத்தின் புலனாய்வுத் துறையினராலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியம், உரிமைசார்ந்த விடயங்களிலிருந்து தமிழர்களை திசைதிருப்பும் வகையிலான பல்வேறு செயற்பாடுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த முன்னெடுப்புகளுக்கு பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் முற்றுமுழுதான அதிகாரத்துடன் செயற்படுமான நிலைமையினை சிங்கள பௌத்தபேரினவாத சக்திகள் முன்னெடுத்து வருவதை காணமுடிகின்றது.



யுத்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி முழு இலங்கையிலும் ஒட்டுக்குழுக்களைக்கொண்டு தமிழ் தேசியத்திற்கு சார்பாகவும் தமிழர்களுக்கு சார்பாகவும் செயற்படுவோரை படுகொலைசெய்யும் பணிகளை முன்னெடுத்த அதேதரப்பினர் அதே நபர்களைக் கொண்டு இன்று கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்த முன்னெடுப்புகளை நாங்கள் இலகுவாக கடந்துசெல்லமுடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். காரணம் இந்த நிலைமையானது எதிர்காலத்தில் கிழக்கின் இருப்பு பாரியளலான கேள்விக்குட்படுத்தும் செயற்பாடாகவேயிருந்துவருகின்றது. இந்த நிலைமைகளையப்படவேண்டுமானால் இது தொடர்பான விழிப்புணர்வைகிழக்கில்முன்னெடுக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் கிழக்கின் மீட்பர்களாக பிள்ளையான், வியாழேந்திரன் ஆகியோரை புலம்பெயர்ந்துவாழும் கிழக்கினை சேர்ந்த சிலரும் கிழக்கில் வாழும் சிலரும் இவர்களை இன்னும் நம்புவது என்பது கிழக்கில் நடக்கும் சம்பவங்கள் தொடர்பான அறியாமையாககூட இருக்கலாம்.



கடந்தகாலத்தில் இவர்கள் கிழக்கில் மேற்கொண்ட செயற்பாடுகளே இன்று கிழக்கில் தமிழர்களின் இருப்புகள் கேள்விக்குட்படுத்துவதற்கான ஏதுவான காரணம் என்பதை கிழக்கில் உள்ள தமிழர்களும் புலம்பெயர்ந்துள்ள கிழக்கினை சேர்ந்தவர்களும் உணரவேண்டும்.

பிள்ளையான் போன்றவர்கள் வெறுமனே கிழக்கில் தமிழர்களின் இருப்பு தொடர்பில் இளைஞர்களை உணர்ச்சிவசப்படச்செய்யும் வகையிலான கருத்துகளை முன்வைக்கின்றார்களே தவிர அவர்களிடம் கிழக்கினை மீட்பதற்கோ அல்லது பாதுகாப்பதற்கோ எந்தவித திட்டங்களும் இல்லை. அவர்கள் பேரினவாதசக்திகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளையே அதிகளவில் முன்னெடுப்பார்கள்.

அத்துடன் தமிழர்களின் இருப்பினை விட தங்களின் இருப்பினையே அவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

இந்தவேளையில் கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகளை ஆயுதங்களாக கொண்டே இவர்கள் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். அதற்கான காரணம் தமிழ் தேசிய அரசியலில் முஸ்லிம்களும் தமிழர்களும் கிழக்கில் இணைந்து பயணிக்கும்போது அது சிங்கள பௌத்த தேசியவாதத்திற்கு ஆபத்தானது என்பதை உணர்ந்து தொடர்ச்சியாக ஏதோவொரு தரப்பினை தமிழர்களிலும் முஸ்லிம்களிலும் வளர்க்கப்பட்டே வருகின்றது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் விடுதலைப்போராட்டத்திற்கு எதிராகவும் தமிழ் தேசியத்திற்கு எதிராகவும் வளர்க்கப்பட்டவரே பிள்ளையானாகும். இன்று மொட்டுக்கட்சியில் வெற்றிபெற்ற வியாழேந்திரனுக்கு வழங்காத அதிகாரங்கள் பிள்ளையானுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் எந்த அமைச்சருக்கும் வழங்கப்படாத அதிகாரங்களும் நிதிகளும் மட்டக்களப்பில் பிள்ளையானுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் இது தொடர்பில் சிந்திக்கும் திறன்கொண்ட மனிதர்கள் இலகுவில் இதன் சூத்திரத்தினை விளங்கிக்கொள்வார்கள்.

இதில் சிறப்பு என்னவென்றால் தமிழர்களிடம் முஸ்லிம்கள் மத்தியிலும் முஸ்லிம்கள் பற்றி தமிழர்களிடமும் இவர்கள் மாறிமாறி பிரசாரங்களை முன்னெடுத்து அவர்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தினாலும் இந்த இரண்டு தரப்புகளும் இணைந்தே பயணிக்கும். வெளியில் அவர்களுக்கு எதிரியாக காட்டிக்கொண்டாலும் உள்ளுக்குள் இவர்கள் மத்தியிலான தொடர்பு என்பது மிகவும் அதிகமானது.

பிள்ளையான் 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டு வரையில் முதலமைச்சராக எடுத்துக்கொண்ட காலப்பகுதியில் பொது மேடைகளிலும் அரசியல் மேடைகளிலும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராகவும் கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்தபோதும் ஹிஸ்புல்லாவுடன் நெருங்கிச்செயற்பட்ட பிள்ளையான் அவருக்கு பல்கலைக்கழகம் அமைப்பதற்கான காணியை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டினை முன்னெடுத்தார்.

இதேபோன்று வாகரை பிரதேசத்தில் முஸ்லிம் வர்த்தகர்களிடம் பணத்தினைப் பெற்றுக்கொண்டு பெருமளவு காணிகளை வழங்கினார். சிலர் முதலமைச்சருக்கு காணி அதிகாரம்இல்லை, அவரால்எப்படிவழங்கமுடியும் என்று கேள்வியெழுப்புகின்றனர் ஆனால் அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச செயலகங்களை பூரண கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து தனது தனிப்பட்ட தேவைகளை பூர்த்திசெய்துவந்தார்.

இவற்றினையெல்லாம் நான் இங்கு ஏன் குறிப்பிடுகின்றேன் என்னால் காலம்காலமாக இவ்வாறானவர்களை பயன்படுத்தி தமிழர்கள் மத்தியில் பிளவினையும் மோதல்களையும் ஏற்படுத்தி தமிழ் தேசியத்திற்கும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்குமான நியாயமான வெளிப் பாட்டை இல்லாமல்செய்வதற்கு மிகவும் தந்தி ரமாக பயன்படுத்தப்பட்டுவருகின்றனர்.

இதற்காகவே பிள்ளையானுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றது. இன்று கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பதவி வழங்கப்பட்டு மாவட்டத்தில்செலவுசெய்வதற்கு பாரியளவிலான நிதிகளும் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக வீதி அபிவிருத்திக்கு என பாரியளவிலான நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றினை தங்களுக்கு சார்பான ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டு பாரியளவில் தரகுப்பணம் பெறுவதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்தி பணிகளில் பாரிய ஊழல் இடம்பெறுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் இந்த செயற்பாடுகள் என்பது தமிழ் மக்கள் மத்தியிலிருக்கும்




விடுதலை உணர்வினை இல்லாமல்செய்து சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகளை முன்னெடுத்துவருகின்றது. சிங்களவர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக தமிழர்கள் கிளர்ந்தெழக்கூடாது என்ற சிந்தனையிலேயே கிழக்கில் பலவிதமான செயற்பாடுகளை சிங்கள அரசு முன்னெடுத்துவருகின்றது. அதன்காரணமாகவே மயிலத்தமடு, மாதவனை போராட்டத்தினை சிங்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# உச்சத்தில் சவால்கள்

**துரைசாமி நடராஜா**

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் விசனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டின் முதல் பத்து மாத காலத்துக்குள் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் கடுமையான பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த இரண்டு வருட காலத்துக்குள் 16 அப்பாவி சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல் காரணமாக உயிரிழந் துள்ளதாகவும் தெரியவருகின்றது. இந்நிலையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் நாம் நோக்குகையில் அண்மைகாலமாக மலையக பகுதிகளிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. அத்தோடு சில சிறுமிகள் பாடசாலைக் காலத்திலேயே கர்ப்பம் தரித்துள்ள விரும்பத்தகாத சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்நிலைமை மிகவும் பாரதூரமானதாகும் என்பதோடு சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஒவ் வொருவரையும் சார்ந்ததாகும்.




எந்தவொரு நாட்டைப் பொறுத்தவரையிலும் சிறுவர்கள் முக்கியத்துவம் மிக்கவர்களாக விளங்குகின்றனர். சிறுவர்களின் பல்துறைசார் அபிவிருத்தியில் குடும்பம் காத்திரமான பங்களிப்பினை வழங்குகின்ற நிலையில் அரசாங்கமும் பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. நாட்டிற்கு பொருத்தப்பாடுடைய, சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட சிறுவர்களை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை காணப்படும் நிலையில் இதனை சாத்தியப்படுத்திக் கொள்வதற்கு முனைதல் வேண்டும்.

இதனிடையே உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் நெருக்கீடுகள் பலவற்றுக்கும் உள்ளாகி வருகின்றார்கள். போர் உள்ளிட்ட நடவடிக்கைகள் சிறுவர்களை வெகுவாக பாதித்து வருகின்றன. போர் நடவடிக்கைகளுக்கு சிறுவர்கள் அதிகளவில் உள்ளீர்க்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற அதேவேளை போர் நடவடிக்கைகளில் சிக்குண்டு அப்பாவி சிறுவர்கள் பலர் உயிரிழக்கும் அபாயமும் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக கடந்த ஒக்டோபர் முதல் இஸ்ரேலிய படையினர் காசாவில் நடத்திவரும் தாக்குதல்களில் இது வரை 5500 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் உட்பட 13,300 க்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அதிர்ச்சி தரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இஸ்ரேலிய தரப்பிலும் ஆயிரக்கணக்கானவர்கள் பலியாகியுள்ளனர். இந்நிலையில் இதுவரை நடந்த குண்டுத் தாக்குதலின் அடிப்படையில் காஸாவில் ஒவ்வொரு மணிநேரமும் 6 குழந்தைகள் உட்பட 15 பேர் பலியாவதாக ஹமாஸ் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 300 க்கும் அதிகமான சிறுவர்களின் கல்வி நிலையங்களும் குண்டுத் தாக்குதலினால் அழிக்கப்பட்டுள்ள நிலையில் சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருகின்றது.

இதேவேளை இலங்கையிலும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு குறைவில்லை. இங்குள்ள சிறுவர்கள் வெவ்வேறு வடிவங்களில் சவால்களை அன்றாடம் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

கொரோனாவுக்கு பிந்திய காலகட்டம் போஷாக்கு ரீதியாக சிறுவர்களை பாதிப்படைய செய்துள்ளது.இலங்கையில் கடந்த 2021 ம் ஆண்டில் 12.2 சதவீதமாகக் காணப்பட்ட எடை குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 15.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேபோன்று தமது பிள்ளைகளுக்கு அவசியமான நிறையுணவை வழங்குவதில் பெருமளவான குடும்பங்கள் சிரமங்களுக்கு முகம் கொடுத்திருந்ததுடன் , பொதுப் போக்குவரத்து சேவை குறைபாட்டின் விளைவாக சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

இத்தகைய நடவடிக்கைகள் சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழிகோலியதுடன் அவர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியதாக யுனிசெப் அமைப்பு ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தது. இதேவேளை இலங்கையில் குறைந்த பட்சம் 6.3 மில்லியன் மக்கள் தீவிர உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு முகங்கொடுத்திருப்பதாகவும், அவசியமான உயிர்காக்கும் உதவிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்படாவிட்டால் இவ்வருடத்தில் அவர்களின் நிலைமை மேலும் மோசமடையும் என்றும் ஆய்வுகள் வலியுறுத்தியுள்ளமையும் தெரிந்ததேயாகும்.தீவிர உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு மலையக மக்கள் அதிகமாக உள்ளாகி இருக்கும் நிலையில் சிறுவர்கள் பலரும் இதில் உள்ளடங்குகின்றனர். நிறையுணவு என்பது பெரும்பாலான மலையக சிறுவர்களுக்கு கனவாகவே உள்ளது.

இது இவ்வாறிருக்க இவ்வாண்டின் முதல் 10 மாதங்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் கடுமையான பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள் ளதாக இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித் துள்ளது. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 16 அப்பாவி சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல் காரணமாக உயிரிழந்துள்ளனர்.சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்படாமல் இன்னும் நிலுவையில் உள்ளது. இதேவேளை கடந்த செப்டம்பர் மாதத்தில் 16 வயதுக்கும் குறைந்த 168 பேர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானார்கள்.இவர்களுள் 22 பேர் ஒரே மாதத்தில் கர்ப்பம் தரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் ஒக்டோபர் மாதத்தில் 131 பேர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான நிலையில் இவர்களுள் 10 பேர் கர்ப்பம் தரித்துள்ளனர்.சிறுவயதிலேயே கர்ப்பம் தரிப்பதன் விளைவாக பிள்ளை வளர்ப்பு, வறுமை உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களுக்கும் இவர்கள் முகம் கொடுக்க வேண்டி நேரிடுகின்றது. வாழ்க்கை பலருக்கு நரகமாகின்றது. பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கான உரிய சிகிச்சை முறைகளை மேற்கொள்வதில் அரசாங்கம் சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உடல் ரீதியான சிகிச்சைகளுக்கு புறம்பாக உளவியல் ரீதியான சிகிச்சைகளையும் வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. சமூகத்துக்கு பயந்து பல சிறுவர்கள் தமக்கெதிரான துஷ்பிரயோகங்களை



அல்லது உரிமை மீறல் களை வெளியில் சொல்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் துஷ்பிரயோகம் காரணமாக பாதிப்படைகின்றன.நாட்டில் வருடாந்தம் சிறுவர்கள் தொடர்பான 5 ஆயிரம் குற்றச்செயல்கள் பதிவாவதாக அரசதரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றன.போதைப் பொருள் பாவனை மற்றும் கையடக்க தொலைபேசி பாவனை என்பன இத்தகைய குற்றச் செயல்களின் அதிகரிப்பிற்கு உந்து சக்தியாகியுள்ளன.

### வேலியும் பயிரும்

இதனிடையே மலையக பகுதிகளில் சிறுவர் உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன அதிகளவில் இடம்பெற்று வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும்.பெருந்தோட்ட சிறுவர் மீதான உரிமை மீறல்கள் காலனித்துவ காலம் தொட்டே இடம்பெற்று வரும் நிலையில் இதன் தொடர்ச்சி இன்றும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. 19 ம் நூற்றாண்டிலேயே பிரித்தானியர்கள் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதில் ஈடுபாடு காட்டி இருந்தனர்.




இக்காலகட்டத்தில் சுமார் 8000 சிறுவர்கள் தொழிலாளர்களாக பெருந்தோட்டத் துறையில் பணிபுரிவதற்காக தமிழகத்திலிருந்து அழைத்து வரப்பட்டிருக்கின்றனர். பெருந்தோட்டத் துறையில் தேயிலை பயிர்ச்செய்கை அறிமுகமானதையடுத்து பெருந்தொகையான சிறுவர் ஊழியம் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1944 க்கு முன்னர் 25 சதம் சிறுவர்களுக்கான நாளாந்த ஊதியமாக வழங்கப்பட்டது. 1947 இல் ரூபா

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## சிங்கள சவேந்திர சில்வாவுக்கு செங்கம்பள வரவேற்பு

# ஈழத் தமிழர் முதுகில் குத்தும் இந்திய வல்லரசு!

தமிழீழப் போராட்டத்தைக் குழப்பியடிக்கும் மோசடிகள் ஒன்றன் பின் ஒன்றாக அணி வகுத்து வருகின்றன. மாவீரர் நாள்(?) கேலிக் கூத்துக்குப் பின் இரண்டகர்கள் இப்போது அரசியல் சதுரங்கத்தில் பிரகடனக் காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளார்கள். முதலாவதாக 'நான்கு தூண்' கொள்கை'ப் புகழ் ஜிடிஎஃப் சுரேன் சுரேந்திரனின் கதையாடலில் இமய மலையிலிருந்து உருட்டப்பட்டுள்ள இமாலயப் பிரகடனம்! இதை அறியாத்தனமாக யாராவது ஆதரித்து விட்டால் அவர்கள் அந்த இமாலயத் தவறுக்காக வருந்துவதற்குப் பொருத்தமான பெயர்தான்!




அடுத்து இந்திய இந்துத்துவ ஆளும் கும்பலின் ஆசியோடு சென்னையிலிருந்து விரியப் போவது 'தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம்'.' இரண்டகர்களுக்கு இனிய முகம், இது முதிய முகம் என்று தன் முகத்தை இரவல் (அல்லது வாடகைக்கு) கொடுத்திருப்பவர் பழ. நெடுமாறன். கட்டியம் உரைக்க இருக்கவே இருக்கிறார் காசி ஆனந்தன். நெடுமாறன் தலைமையில்தான் கூட்டுப் பிரகடனத்துக்கு மாநாடு கூட்டப் போகிறார்கள். 'ஐயா'' இந்த வயதில் இந்த அளவுக்குத் தாழ்ந்து போவார் என்று நம்புவது உலகத் தமிழர்களுக்குக் கடினமாகத்தான் உள்ளது.

காசி ஆனந்தனும் பழ. நெடுமாறனும் தமிழீழத்துக்காக எந்தக் காய் நகர்த்துவதாக இருந்தாலும் அதற்கு முன் உலகத்தமிழர்களிடம் அவர்களின் அண்மைய மோசடிக்கு வெளிப் படையாக மன்னிப்புக் கேட்க வேண்டும். பிரகடனம், பிலாக்கனம் எல்லாம் பிறகுதான்!



இராசபட்சேக்கள் நடத்திய இனவழிப்புக்கு முழுக்க முழுக்க உடந்தையாக இருந்த இந்திய அரசு, பன்னாட்டு அரங்கிலும் இனவழிப்புக் குற்றச்சாட்டுக்கு ஆளானோரை சூழ்ச்சித் திறத்தோடு இன்றளவும் பாதுகாத்து வரும் இந்திய அரசு... இப்போதும் இனக் கொலைக் குற்றவாளிகளுக்கு 'யாமிருக்க பயமேன்?'' என்று சேதி சொல்லியிருக்கிறது. அதற்கு இந்திய சாணக்கியம் கண்ட வழிதான் சிங்கள இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்குப் படாடோபமான வரவேற்பு!

தமிழினவழிப்புப் போரில் கோழைத்த னமாக அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்த சிங்களப் படைப் பிரிவுகளின் முதன்மைத் தளபதிகள் ஐந்தாறு பேரில் ஒருவர்தான் சவேந்திர சில்வா. இவர் தலைமையிலான படைப் பிரிவுகள் இழைத்த போர்க் குற்றங்கள் ஐநா அறிக்கைகளில் பதிவாகியுள்ளன. அவரே இந்தக் குற்றங்களைத் தன் வீரச் செயல்களாகப் பீற்றிக் கொள்ளவும் தயங்கவில்லை.



**தியாகு**
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

சவேந்திர சில்வாவின் போர்க் குற்றங்கள் சிங்களத்தின் தமிழினவழிப்புப் பெருங்குற்றத்தில் முக்கியக் கூறுகளாகும். யுகோஸ்லாவிய இனக் கொலைகளில் ஸ்லோபடான் மிலோசெவிக்கின் தளபதிகள் பன்னாட்டு நீதிமன்றத்தில் தண்டிக் கப்பட்டது போல் தண்டிக்கப்பட வேண்டிய ஒருவர்தான் சவேந்திர சில்வாவும்.

சவேந்திர சில்வாவின் கொடுங்குற்றப் புகழ்' உலகெங்கும் பரவிக் கிடக்கிற ஒன்று. செவ்விந்தியர்களை இனவழிப்புச் செய்து நிறுவப் பெற்றதும், உலகெங்கும் பற்பல இனவழிப் புகளை முன்னின்று நடத்தியதும், இன்றளவும் இசுரேலின் நெட்டன்யாகு வரை எத்தனையோ இனக்கொலைக் குற்றவாளிகளுக்கு ஆபத்பாந்த வனுமாகிய அமெரிக்காவே சவேந்திர சில்வாவின் போர்க் குற்றங்களைக் கேட்டு 'அதிர்ச்சி'யுற்று' அவர் அமெரிக்காவில் நுழையத் தடை விதித்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

மனிதவுரிமைகளுக்கான ஐநா உயரா ணையர் சிறிலங்காவின் போர்க் குற்றவாளிக ளுக்குப் பன்னாட்டு அரசுகள் பயணத் தடை விதிக்கப் பரிந்துரைத்தார். சிங்கள அரசோ இந்தக் குற்றவாளிகளை ஐநாவிற்கும் பன்னாட்டு அரசு களுக்கும் தூதுவர்களாக அனுப்பி அவர்களுக்கு அரசதந்திரச் சட்டக் காப்பு வழங்கியது. சவேந்திரா கையில் தமிழர்களின் குருதிக் கறையோடு ஐநாவுக்குச் சென்றதும், ஐநா அமைதிக் காப்புப் படைகளில் பொறுப்பேற்றதும் எவ்வளவு பெரிய கொடுமை!

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு நடத்திய போருக்கு இந்தியா வழங்கிய ஆதரவுக்கும் வழிகாட்டலுக்குமான காரணங்களை ஆய்வு செய்த நோர்வே நாட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று சுட்டிக்காட்டிய செய்தி: இந்திய அரசு இந்திய மண்ணில் பொதுமக்களுக்கு – குறிப்பாகப் பழங்குடி மக்களுக்கு - எதிராகப் 'பச்சைவேட்டை'' போன்ற உள்நாட்டுப் போர் நடவடிக்கைகளை நிகழ்த்த இலங்கையில் வைத்து ஒத்திகை பார்க்க விரும்புகிறது என்பதாகும். இப்படிப் பார்க்கும் போது, இந்திய IARAANUVATH இராணுவப் பயிற்சிக் கழகத்தில் பயில்படையினரின் பயிற்சி நிறைவு விழாவுக்கு முதன்மை விருந்தினராக சவேந்திர சில்வா அழைக்கப்பட்டது பொருத்தம் என்றுதான் சொல்ல வேண்டும்.



பயிற்சி நிறைவு செய்த ஒவ்வொருவர் கையிலும் வாள் கொடுத்தாராம் சவேந்திரர்! கொலைகாரன் கொடுத்த கொலைவாள் இந்தப் பயில் படையினருக்கு என்ன கற்றுத்தரும்? ஒன்றே ஒன்றுதான்: 'அப்பாவிப் பொதுமக்களை வதைக்கவும் அழிக்கவும் தயங்காதீர்! என்னைத் தேடி வந்த விருதுகளும் பரிசுகளும் மரியாதைகளும் உங்களையும் தேடிவரும்!''

இந்தியாவைத்தான் நம்பியிருக்கிறோம் என்று நாளும் புலம்பிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் பேர் அறிஞர்கள் இனி மோதிக்கும் அமித்சாவுக்கும் முதுகு சொறிந்தால் போதாது, சவேந்திர சில்வா போன்ற தளபதிகளுக்கும் 'போற்றி போற்றி'' பாட வேண்டியதுதான்!

தமிழர்கள் இந்த இனக்கொலைக் குற்றவாளிகள் ஒவ்வொருவரையும் கூண்டிலேற்று வதில் உறுதியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குற்றவாளியின் பெயரையும், முகத்தையும், அவர் செய்த கொடுஞ்செயல்களையும் நினைவில் வைத்துக் கொள்வதோடு உலகெங்கும் பரப்பவும் வேண்டும். எந்த நாடும் இனவழிப்பு உள்ளிட்ட பன்னாட்டுக் குற்றம் புரிந்தோரை வரவேற்று மதிப்பளிப்பது கிடக்கட்டும், நுழையவே அனுமதிக்கக் கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் [TGTE] இந்த இனக் கொலைக் குற்றவாளிகளில் முதன்மையான பன்னிருவர் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. பட்டியலில் ஆறாவது இடத்தில் சவேந்திர சில்வா இடம்பெறுகிறார். மகிந்த இராசபட்சே, சந்திரிகா, கோத்தபாயா, சரத் பொன்சேகா, ஜகத் டயஸ் ஆகியோருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர் சவேந்திர சில்வா! சவேந்திராவுக்கு அமெரிக்க அரசு தடை விதித்தது போல் இந்தியாவும் தடை விதிக்க வேண்டும்! உலக நாடுகள் ஒவ்வொன்றும் தடை விதிக்க வேண்டும்! இலங்கையும் தடை விதிக்குமளவுக்கு தமிழர்கள் கிளர்ந்தெழுந்து போராட வேண்டும்.

சவேந்திராவுக்கும் போர்க் குற்றம், மாந்தக்குல விரோதக் குற்றம், இனக் கொலை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# பிராந்தியப் போராக விரிவடையும்
# இஸ்ரேல் - பாலஸ்தீன போர்

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

புதிய ஆண்டில் மிகப்பெரும் போர் ஒன்று மத்தியகிழக்கில் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உருவாகி வருகின்றன. காசா மீது தாக்குதலை மேற்கொண்டுவந்த இஸ்ரேல் தற்போது லெபனான் நோக்கி தனது பார்வையை திருப்பியுள்ளது.

காசாவில் எற்பட்டுவரும் இழப்புக்களுக்கு லெபனானனின் ஆயுத உதவிகளும், மற்றும் இஸ்ரேல் மீதான தொடர் தாக்குதலும் தான் காரணம் என அறிந்த இஸ்ரேல் கடந்த வாரம் தனது இரண்டு படையணிகளை வடக்கு காசாவில் இருந்து நகர்த்தியிருந்தது.



தற்போது அந்த அணிகள் லெபனானின் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளன. ஹிஸ்புல்லாக்கள் பலமாக இருக்கும் வரையில் தம்மால் ஹாமாஸை வீழ்த்த முடியாது என இஸ்ரேல் உணர்ந்துள்ளது.

அது மட்டுமல்லாது இந்த போர் தொடர்வதால் ஏற்பட்டுவரும் படைத்துறை பொருளாதார மற்றும் ஆளணி இழப்புக்களை இஸ்ரேல் சமாளிக்க முடியாத நிலை ஒன்றும் ஏற்பட்டுள்ளது. தனது பாதுகாப்புக்கு 58 பில்லியன்களை ஒதுக்கியுள்ளது இஸ்ரேல் இது அதன் மொத்த உற்பத்தியில் 25 விகிதமாகும்.

மறுவளமாக செங்கடலின் ஊடான கப்பல் போக்குவரத்தின் பாதிப்பு, உல்லாசத்துறையின் வீழ்ச்சி என்பன இஸ்ரேலை கடும் அழுத்தங்களுக்கு உள்ளாக்கியுள்ளது. காசா மீதான தாக்குதலில் கொல்லப்படும் பொதுமக்களின் எண்ணிக்கையும் அதற்கு அனைத்துலக ரீதியில் கடும் விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

இனஅழிப்பு குற்றம் என்ற வழக்கை இஸ்ரேல் மீது தென்னாபிரிக்கா கடந்த வாரம் நெதர்லாந்தில் உள்ள அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் தொடுத்துள்ளது. அதந்த வழக்கு எதிர்வரும் 11 ஆம் நாள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில் தற்போது மலேசியாவும் அதற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் செவ்வாய்க்கிழமை லெபனானின் தலைநகர் பெய்ரூட்டுக்கு தெற்குப் புறம் உள்ள நகரில் அமைந்திருந்த ஹமாசின் அரசியற்றுறை அலுவலகத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட அளில்லாத தாக்குதல் விமானத்தின் தாக்குதலில் ஹமாசின் அரசியல் பிரிவின் பிரதித் தலைவர் அருறி மற்றும் லெபனான் பிரிவிக்கான அல்குசாம் பிரிகேட்டின் கட்டளை அதிகாரி, அல்குசாம் பிரிகேட்டின் வடக்கு காசா பிரிவிற்கான துணைத்தளபதி உட்பட 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேசமயம், ஈரானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஏறத்தாழ 110 பேர் கொல லப்பட்டுள்ளதுடன், 170 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த இரண்டு சம்பவங்களும் இரானின் காட் படைப்பிரிவு எனப்படும் வெளியக புலனாய்வு அமைப்பின் கட்டளை அதிகாரி ஜெனரல் சொலமானி; கொல்லப்பட்ட நினைவு தினத்தில் இடம்பெற்றுள்ளது.



2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி சொலமானி ஈராக்கிற்கு பயணம் மேற்கொண்ட சமயம் விமானநிலையத்தில் இருந்து இறங்கி செல்லும்போது அமெரிக்காவின் எம்.கியூ-9 ஆளில்லாத தாக்குதல் விமானத்தின் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார்.

அவரின் நினைவுதினத்தில் ஹாமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர் கொல்லப்பட்டதுடன், சொலமானியின்நினைவிடத்தில்வெடித்தஇரண்டு குண்டுகளினால் 100 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும், 170 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தும் உள்ளனர்.



றிமோட் கொன்றோல் மூலம் இயக்கப்படும் குண்டுகளே அங்கு வெடித்துள்ளன. இந்த குண்டுவெடிப்பை தொடர்ந்து அதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என தெரிவித்துள்ள அமெரிக்காவின் வெளிவிவகார செயலகம், இஸ்ரேலுக்கும் அதில் தொடர்பில்லை என தெரிவித்துள்ளது.

ஆனால் மறுவளமாக ரஸ்யா, ஐ.நாவின் பொதுச் செயலாளர் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல நாடுகள் ஈரானுக்கு தனது அனுதாபங்களை தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதலை பயங்கரவாத தாக்குதல் என ஈரானின் அதிபர் தெரிவித்துள்ளதுடன், பதிலடி கொடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தனது நாட்டின் இறைமை மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என ஹிஸ்புல்லாவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும்கடந்தவியாழக்கிழமை(4) ஈராக்கில் உள்ள ஈராக்கின் உள்துறை அமைச்சகத்தின் கட்டடத் தொகுதியில் உள்ள பி.எம்.யு என்ற அமைப்பின் தலைமையகம் மீது அமெரிக்காவின் ஆளில்லாத தாக்குதல் விமானம் மேற்கொண்ட தாக்குதலில் ஈராக்கின் தலைநகரமான பக்தாத் பெல்ட் நடவடிக்கை பிரிவின் துணைத்தளபதி

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

கடந்த செவ்வாய்க்கிழமை(2) யப்பானில் ககனெடா விமான நிலையத்தில் இடம்பெற்ற விபத்தில் ஏயர்பஸ் ரக விமானம் தீப்பற்றி எரிந்தபோதும் அதனை அதன் விமானிகள் மூவரும் அறியவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

யப்பானின் விமான நிறுவனத்திற்கு சொந்தமான 516 என்ற இலக்கமுடைய விமானம் தரையிறங்கியபோது, விமான ஓடுபாதையில் பறப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த Bombardier Dash-8 என்ற சிறிய விமானத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இருந்து 382 உயிர்கள் எந்த காயங்களுமின்றி காப்பாற்றப்பட்டன. ஒரு இனத்தின் கலாச்சாரத்தை வெளிஉலகிற்கு காட்டுவது சம்பவங்களில் காணப்படும் சாட்சிகள் தான் இந்த விமான விபத்து யப்பானிய மக்களின் காலாச்சாரம் மற்றும் பண்பாட்டுக்கான சாட்சியமாகியுள்ளது.


விமானத்தில் இருந்து பயணிகள் வெளியேற்றப்படும்போதும் சரி அண்மையில் இடம்பெற்ற பூமி அதிர்வின்போதும் சரி யப்பானிய மக்களின் கலாச்சாரம் எவ்வாறு அவர்களின் சமூகத்திற்குள் பலமாக உள்வாங்கப்பட்டுள்ளது படுத்தியிருந்தனர். விமானப் பணியாளர்களின் அந்த துணிச்சலான மற்றும் அறிவுபூர்வமான நடவடிக்கைகளை அவர்கள் பாராட்டியும் இருந்தனர்.

நாம் அனைவரும் இறங்கிய 10 நிமிடங்களில் நான் ஒரு வெடிப்பதிர்வை கேட்டேன் என தான் மயிரிழையில் உயிர்தப்பியது குறித்து 28 வயதான ருபாசா சவேடா தெரிவித்தார். நாம் சில நிமிடங்கள் தாமதித்திருந்தாலும் இறந்திருப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவசரகால கதவுகளை திறப்பதற்கு

# ஒழுக்கம் உயர்வு தரும் நிரூபித்த யப்பானியர்கள்

ஆர்த்தீகன்




சிறிய விமானத்தில் இருந்த 6 பேரில் 5 பேர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார். இந்த விமானம் திங்கட்கிழமை(1) இடம்பெற்ற பூமி அதிர்வினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொருட்களை கொண்டு செல்லவிருந்த விமானமாகும்.

இந்த விபத்தில் பயணிகள் விமானம் தீப்பற்றி எரிந்தபோது விமானத்தின் உள்ளக தொலைதொடர்பு கருவிகள் சேதமடைந்ததால் விமானிகள் விமானம் தீப்பிடித்ததை அறியவில்லை. விமானப் பணியாளர் ஒருவரே அதனை அவர்களுக்கு தெரியப்படுத்தினார்.

367 பயணிகள், 3 விமானிகள் மற்றும் 12 விமானப் பணியாளர்கள் அந்த விமானத்தில் இருந்தபோதும் எல்லோரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டது மிகுந்த ஆச்சரியங்களை ஏற்படுத்தியுள்ளது. பயணிகள் அனைவரும் அச்சமடையாது விமான பணியாளர்களின் கட்டளைகளை ஏற்று நடந்ததால் அது சாத்தியமானதாக தெரிவிக்கப்படுகின்றது.

யப்பான் மக்கள் ஏனைய நாட்டு மக்களைப்போலவே தமது உயிர்களை மதிக்கின்றனர். இருந்தபோதும் அவர்கள் ஒழுக்கத்தை பேணுகின்றனர் என்பதைவிட ஒழுக்கத்தை கடுமையாக மதிக்கின்றனர் என்பதே சரியானதாகும்



அவசரகால நிலைமையில் பதற்றப் படாமல், மற்றவர்களை குறைகூறாமல் தமக்கான உத்தரவுகளுக்கு கீழ்ப்பணிந்து ஒழுக்கத்தைப் பேணியதால் தான் மிகப்பெரும் தீ விபத்தில் என்பதை அறிய முடிந்துள்ளது.

உலகக்கோப்பைக்கான உதைபந்தாட்டப் போட்டியின் போது கூட விளையாட்டு முடிந்ததும் மக்கள் அங்கு வீசப்பட்ட குப்பைகளை எல்லாம் அகற்றி சுத்தம் செய்துவிட்டே வீட்டுக்கு சென்றிருந்தனர். எந்த ஒரு நெருக்கடி யான காலத்தின் போதும் ஒவ்வொரு யப்பானிய பிரஜையும் பொறுமையாகவும், தன் னடக்கத்துடனும், விடாமுயற்சியுடனும் வாழப் பழக்கப்பட்டவர்கள். சவால்களை சந்திக்கும் போது அவர்கள் யாரையும் குற்றம்சுமத்த முன்வருவதில்லை இதனை நாம் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.



367 பயணிகளை 18 நிமிடங்களில் எவ்வாறு பாதுகாப்பாக வெளியேற்றினார்கள் இது தான் தற்போதைய கேள்வி யப்பானின் இரண்டாவது பெரிய விமான நிறுவனத்தின் பணியாளர்களின் தகவல்களின் அடிப்படையில் அது எவ்வாறு நிகழ்ந்தது என்பதை நாம் இங்கு பார்ப்போம்.

அவசரகால நடவடிக்கைகளை பாடப்புத் தகத்தில் உள்ளது போலவே பயன்படுத்தினோம் என கூறியுள்ளார் அதன் பணியாளர் ஒருவர் முதலாவது விதி அச்சத்தை கட்டுப்படுத்துவது. ஏ-350 ஏயர்பஸ் விமானத்தின் அகலமான உடற்பகுதி தனது இயக்கத்தை நிறுத்தியவுடன், பயணிகளை அமைதிகாக்குமாறு பணியாளர்கள் கேட்டுக்கொண்டனர். ஆனால் அப்போது மிகப்பெரும் செஞ்சுவாலை விமானத்தின் பல பகுதிகளுக்கு பரவிக்கொண்டிருந்தது.

பயணிகள் அறைக்குள்ளும் பூகை மூட்டமாக இருந்தது. சுற்றுச்சூழல் நிகழ்வுகளை அவதானித்து அவசர நிலைமைகளின் போது வெளியேறும் 8 பாதைகளில் எவை பாதுகாப்பா னவை என்பதை அவர்கள் உடனடி யாகவே முடிவு செய்தனர். உடனடியாகவே மிகவும் சுருக்கமான நேரிடையான கட்டளைகள் வழங்கப்பட்டன. அதற்கான பயிற்சிகளை அவர்கள் எடுத்திருந்தனர். பயணப் பைகளை எடுக்க வேண்டாம், இந்த வாசலை பயன்படுத்த வேண்டாம் என்ற கட்டளைகள் காத்திரமாக ஒலித்துக்கொண்டிருந்தன.

அதனை தப்பிவந்த பயணிகளும் உறுதிப்

விமானிகளின் அறையின் அனுமதிகள் தேவை ஆனால் விமானத்தின் கப்டன் வெளியேறும் இரு கதவுகளுக்கும் அருகில் நின்று அதனை மேற்கொண்டிரந்தார்.

பின்னால் இருந்த 3 ஆவது கதவு தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக சரியாக செயற்படவில்லை. எனினும் பணியாளர்கள் சரியான முடிவை எடுத்து அதனை திறந்து பயணிகளை சறுக்கிச் செல்லுமாறு பணித்து வெளியேற்றினர். இவ்வாறான அவசரகால நிலைமைகள் தொடர்பில் பணியாளர்கள் வருடம்தோறும் பயிற்சிகளை பெறுவது வழக்கம். எனவே விமானிகளின் கட்டுப்பாட்டு அறையுடன் அவர்கள் தொடர்புகளைப் பேணமுடியாது விட்டாலும் அவர்களால் செயற்பட முடியும்.

மூன்று வழிகளாலும் 18 நிமிடங்களில் எல்லா பயணிகளையும் அவர்கள் வெற்றிகரமாக வெளியேற்றினர். 2015 ஆம் ஆண்டு சேவையில் இணைந்த 320 மில்லியன் டொலர்கள் பெறு மதியான ஐரோப்பாவின் எயர்பஸ் நிறுவனத்தின் ஏ-350 விமானம் சந்தித்த மிக முக்கியமான முதலாவது விபத்து இது.

பாரமற்ற கார்பன் கொம்பசிற் எனப்படும் பொருட்களால் வடிவமைக்கப்பட்ட முதலாவது பயணிகள் விமானமும் இதுவே. எனவே தான் அது முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது. ஏ350-900 என்ற விமானம் 440 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியது. அவசரகாலத்தில் வெளியேறும் அதன் கதவுகளில் அரைவாசி பயன்படுத்தப்பட்டாலே 90 வினாடிகளில் எல்லா பயணிகளையும் வெளியேற்றக்கூடியவாறே அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனவே ஏன் தற்போது 18 நிமிடங்கள் எடுத்தது என்பது தெளிவற்றது. சில சமயங்களில் பயணிகளுக்கு உதவிகள் தேவைப்பட்டிருக்கலாம். பயணிகளின் உடல் அமைப்பு மற்றும் இயங்கு தன்மைகளை கொண்டு அவர்களுக்கு அவசரகால நடவடிக்கைகளின் போது உதவிகள் தேவைப்படும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பாடப்புத்தகத்தில் இருந்ததை பணியாளர்கள் உறுதியாக கடைப்பிடித்துள்ளனர் என எயர்பஸ் நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தள்ளார். 8 சிறுவர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அவசரகால வெளியேற்றத்தின்போது பய ணப்பைகளை எடுப்பது உயிர் ஆபத்துக்களை அதிகரிக்கும் என விமானத்துறை நிறுவனங்கள் பல வருடங்களாக தொடர்ந்து எச்சரித்து

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## இளைஞர்களை... தொடர்ச்சி ...

தீவிர போக்கிற்கு வந்த சிவகுமாரன், சையனைட்டை உட்கொண்டு தன்னை ஆகுதி யாக்கிக் கொள்ளும் அளவிற்கு சென்றமைக்கும் இந்தச் சம்பவம் காரணமாக அமைந்திருந்தது என்பதுதான் என்னுடைய கருத்து.

அது மட்டுமன்றி, அதற்குப் பின்னரும் இந்த இளைஞர்கள்தான் தமிழாராய்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களுக்காக நினைவுத் தூபி ஒன்றை அமைத்தார்கள். வீரசிங்கம் கண்டபத்துக்கு முன்பாக இது அமைக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னர் அரச படைகள் அந்த நினைவுத் தூபி இருக்கக்கூடாது எனக் கருதி அதனை இடித்தார்கள்.

ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாஸ, ஒரு முறை யாழ்ப்பாணம் வந்திருந்த போது, அதனைக் கண்டு அதனை மீள அமைப்பதற்கு அனுமதி தந்தார். யாழ். மாநகர சபையின் ஆணையாளராக அப்போது நான் இருந்தேன். அதனை மீண்டும் அமைப்பதற்கு உடனடியாகவே நான் நடவடிக்கை எடுத்தேன். அந்த நினைவு தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதற்காகவே அதனை நான் மீண்டும் கட்டியெழுப்பினேன். பிரேமதாஸவின் அங்கீகாரத்துடன் அதனைச் செய்தமையால், இப்போதும் அது நிலைத்து நிற்கின்றது. எங்களுடைய, தமிழ்த் தேசியத்தின் அடையாளமாகவே இன்றும் நாம் அதனைப் பார்க்கிறோம்.

**நினைவுத்தூபி அமைக்கப்பட்டிருந்தாலும், போதிய பராமரிப்பின்றி அது உள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றதே...?**

உண்மைதான். அது அமைந்திருக்கும் இடம் ஒரு தாழ்நிலப் பரப்பு. அதனால், அதில் வெள்ளம் தேங்கி நிற்கும். அங்கு மண் நிரவி சமப்படுத்தினாலும், அது போதியதாக இருக்கவில்லை. ஆனால், பராமரிப்பு போதியதாக இல்லை என்பது உண்மைதான்.

அந்த நிலம் உண்மையில் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது. அதனால், அது மாநகர சபையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் மாநகர சபை ஆணையாளராக இருந்த போது அதனை மாநகரசபையின் கட்டுப்பாட்டுக்குள் எடுத்து அந்த நினைவுத் தூபியைப் புனரமைப்புச் செய்தேன். ஆனால், பராமரிப்பில் சில குறைபாடுகள் இருக்கின்றது என்பது உண்மைதான்!

## பண்பாட்டு இனப் ... தொடர்ச்சி ...

ஏன் வந்தனரென்ற பதட்டநிலை காணப்பட்டது..."

"..பொலிஸ் டிரக்கின் பின் கதவு ஒன்று திறக்கப்பட்டிருந்தது. அதற்குள் மூன்று, நான்கு பொலிஸார் இருந்தனர். அவர்கள் திடீரெனக் கீழே குதித்து குண்டாந்தடியாலும், துவக்கின் அடிப்பாகத்தினாலும் சனங்களைத் தாக்கினார்கள். அதேசமயம் கூட்டத்திற்குள் பல இடங்களிலும் பொலிஸாரின் தாக்குதல் நடந்தது. அவர்கள் எப்படி அங்கு வந்தனரென்பது எனக்குத் தெரியாது. இச்சம்பவம் நிகழ்வதற்கு முன் அந்த வீதியில் வேறு எந்த வாகனமும் வரவில்லை. குழப்பமும் நிகழவில்லை.

பொலிஸ் டிராக்கிலிருந்து எந்தத் தகவலை யாவது ஒலிபரப்பியதை நான் கேட்கவில்லை. தாக்குதல் திடீரென ஆரம்பமானது. துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. பொலிஸார் சுடுவதை நான் நேரில் கண்டேன். பல தடவைகள் வெடிச்சத்தங்கள் கேட்டன. அவற்றில் 45 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததை நான் கேட்டேன். இந்தச் சமயத்தில் மின்சாரக் கம்பி அறுத்து தொங்கியதை நான் காணவில்லை.."

"..சிதறி ஓடிக்கொண்டிருந்த பெண்களை யும், பிள்ளைகளையும் பொலிஸார் துரத்தி, துப்பாக்கியின் அடிப்பாகத்தினால் தாக்கினார்கள். ஓடிக்கொண்டிருந்தவர்களின் உடைகளைப் பொலிஸார் பிடித்து இழுத்ததையும் கண்டேன். உடைகள் இதனால் உரிந்து நிலத்தில் விழுந்தன. உள்ளாடையுடனும், மேற்சட்டையுடனும் பல பெண்கள் தொடர்ந்தும் ஓடிக்கொண்டிருந்தனர்.."

"..பின் பஸ் நிலயத்தில் என்ன நடக்கிறது எனக் காணச்சென்றேன். அங்கும் பொலிஸார் சனங்களைத் தாக்கினார்கள். கண்ணீர் புகைக் குண்டுகளும் வெடித்தன.."

இந்தக் கோரப் பலியெடுப்பில் 11 தமிழர்கள் சிறீலங்கா பொலிஸாரினால் கொல்லப்பட்டனர். எவ்வித அரசியல் கலப்புமற்று, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மாத்திரம் இடம்பெற்ற இந்நிகழ்வை சிறீலங்கா அரசு படுகொலை ஒன்றின் மூலம் முடித்துவைத்தது. தமிழ் பண்பாட்டுக்கூறுகளில் ஒன்றாகிய தமிழ் மொழி வளர்ச்சியை அழிக்கும் நோக்குடன் இடம்பெற்ற இந்தப் படுகொலையானது, இத்தீவில் தமிழ் பண்பாட்டு இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது என்பதற்கு வலுவான சான்றாகும்.

இந்த விடயத்தினை மாநாடு இடம்பெறு வதற்கு முன்பே ஆருடம் சொல்லியதைப் போல சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் குறிப்பிட்டுள்ளது. "தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரசு அடியோடு ஒத்துழைப்பு நல்க மறுத்து அதை நசுக்க முயலுமானால், அதன் பொருள், அரசு, தமிழ் மொழி உயர்வதை, வளர்வதை, வாழ்வதை அடியோடு விரும்பவில்லை. தமிழும் தமிழினமும் இந்நாட்டில் புகழோடு தலைதூக்கி நிற்பதை விரும்பில்லை. தமிழை ஒழித்துக்கட்டவே அது முயல்கிறது என்பதுதான்".

***10.01.1974 அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் விபரம்:***

1. வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 – மாணவன்)
2. பரம்சோதி சரவணபவன் (வயது 26)
3. வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32)
4. ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 – ஆசிரியர்)
5. புலேந்திரன் அருளப்பு (வயது 53)
6. இராசதுரை சிவானந்தம் (வயது 21 – மாணவன்)
7. இராஜன் தேவரட்ணம் (வயது 26)
8. சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 – ஆயுள்வேத வைத்தியர்)
9. சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 – மாணவன்)

## முயற்சி செய்தால் ... தொடர்ச்சி ...

மனிதனது வாழ்வில் சம்பவங்கள் பல இருந்தாலும் அதற்கான வரலாறு இருக்க வேண்டும். தாயின் கருவறையில்

பிறக்கும் போது எதிர்காலம் பற்றி சிந்திப்பது கிடையாது. சமூக அக்கறை கொண்ட இந்த பெண்மணி தனக்காகவும் தனது கிராமம் சார்பாகவும் உழைத்து வருகிறாள். ஏழை ,பணக்காரன் என்ற தாழ்வு மனப்பாங்கின்றி எல்லோரும் சமம் என்ற ரீதியோட வாழ வழிவகுக்க வேண்டும்.

நல்லதொரு உதவும் மனப்பான்மை கொண்ட இந்த பெண்மணி மேலும் சமூகத்தில் திறம்பட ஒரு எடுத்துக்காட்டாக எதிர்காலத்தில் வாழ்வார். அதிகாலையில் எழுந்து தனது கடமையை ஆரம்பிக்க முன் தினமும் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு வழிபாட்டில் ஈடுபடுவாள். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி விட்டு தொழிலை ஆரம்பிப்பாள்.

"இந்த காலத்தில் குடும்பத்தில் ஒருவர் உழைத்தால் போதாது கல்வி கற்றால் மாத்திரம் தான் வாழ முடியும் அரச தொழில் மட்டும் தான் தொழில் என நினைக்காதீர்கள் இப்படியான சுய தொழில் எம் வாழ்க்கையில் நமக்கு அதுவே சோறுபோடும்" என்றவாறு தனது கருத்தை வெளியிட்டார்.

நாட்டின் வறுமை நிலைக்கு ஒரு சாதகமான முடிவாக இவ்வகை பெண்கள் போன்று ஏனைய பெண்களும் சமூகத்தில் ஊக்கப்படுத்தினால் நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லலாம்.

**முற்றும்**

## இஸ்ரேல் மீதான ... தொடர்ச்சி ...

மேற்கொண்டுவருவதாகவும் தென்னாபிரிக்கா தனது வழக்கில் தெரிவித்துள்ளது. 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் இனஅழிப்புக்கான சரத்துக்களின் அடிப்படையில் ஒரு இனத்தை பகுதியாகவே அல்லது முஐரமயாகவெ அழிப்பது இனப் படுகொலை என்ற வரைமுறைக்குள் அடங்கு வதாக தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.

இதனிடையே இந்த வழக்கை எதிர் கொள்வதற்கு இஸ்ரேல் தனது தரப்பு அதி காரிகளை தயார்படுத்தி வருவதாக இஸ்ரேலிய ஊடகம் தெரிவித்துள்ளது. எனினும் இஸ்ரேல் இனஅழிப்பை மேற்கொண்டதற்கான எந்த தடையங்களையும் தான் காணவில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## சீரற்ற கால ... தொடர்ச்சி ...

தாங்கள் பயிர்களை மேற்கொண்டு பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க பல ரூபாக்களை முதலீடு செய்தும் போதிய விளைச்சல் கிடைக்கவில்லை எனவும் வெள்ள நீரினால் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய அதிகாரிகள் தங்களுக்கு தேவையான நஷ்ட ஈடுகளை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனிடையே, வடக்கிலும் பெருமளவான நெல் வயல்கள் வெள்ளப்பெருக்கினால் அழி வடைந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 800 ஏக்கர் நெல் வயல்கள் மற்றாக அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஈரானில் இடம் ... தொடர்ச்சி ...

இருந்து இறங்கி செல்லும்போது அமெரிக்காவின் எம்.கியூ-9 ஆளில்லாத தாக்குதல் விமானத்தின் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார்.

றிமோட் கொன்றோல் மூலம் இயக்கப் படும் குண்டுகளே அங்கு வெடித்துள்ளன. இந்த குண்டுவெடிப்பை தொடர்ந்து அதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என தெரிவித்துள்ள அமெரிக்காவின் வெளிவிவகார செயலகம், இஸ்ரேலுக்கும் அதில் தொடர்பில்லை என அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த குண்டு வெடிப்பு தொடர்பில் ரஸ்யா, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, ஜேர்மனி, பிரான்ஸ் உட்பட பல நாடுகள் தமது கண்டனத்தையும், ஈரானுக்கு தமது அனுதாபங்களையும் தெரிவித்துள்ளன.

## பிரதேசசெயலக ... தொடர்ச்சி ...

செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் இந்த பொருட்களை தயாரித்திருந்தனர்.

எமது உத்தியோகத்தர்களிற்குள் மறைந் திருக்கும் கலைத்திறன் ஆற்றல்களையும் கலை ஆர்வத்தினையும் வெளிக்கொணரும் வகையில் உருவாக்கப்பட்ட ஆக்கங்களை உங்கள் பார்வைக்கு காட்சிப்படுத்துவதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் பெருமை கொள்கின்றது என அதில் பணியாற்றும் பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## உச்சத்தில் ... தொடர்ச்சி ...

1.12, 1954 இல் ரூபா 1.63, 1967 இல் ரூபா 2.13, 1977 இல் ரூபா 3.23 என்ற வகையில் சிறுவர்களுக்கான நாளாந்த ஊதியங்கள் வழங்கப்பட்டன. சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தும் நடவடிக்கை காரணமாக அவர்களின் கல்வியுரிமைகள் பெரும்பாலும் மறுதலிக்கப்பட்டன.

பெருந்தோட்ட சிறுவர்கள் மீதான துஷ்பிரயோக அதிகரிப்பிற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. தாய் வெளிநாடு சென்றுள்ள நிலையில் பிள்ளை வேறொருவரின் பராமரிப்பில் தனித்து விடப்படுதல், பாமரத்தன்மை, போக்குவரத்து பிரச்சினைகள், லயத்து வாழ்க்கை முறை, நோய்கள் போன்ற பலவும் இதற்கு ஏதுவாக அமைகின்றன.'

வேலியே பயிரை மேய்ந்தாற்போல' பாதுகாப்பு வழங்க வேண்டிய தரப்பினரே சில வேளைகளில் பிள்ளைகளுக்கு இடையூறு விளைவித்து துஷ்பிரயோக நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மலையகத்தில் இது அதிகமாகும். ஒரு பிள்ளையின் ஆளுமை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திகளுக்கும் பெற்றோரின் அன்பு, காப்பு, கணிப்பு என்பன அவசியமாக தேவைப்படுகின்றது. இவை உரியவாறு கிடைக்காத பிள்ளைகளை இலக்கு வைத்து விஷமிகள் தனது காரியத்தை சாதித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் மலையகத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன.

மலையகத்தில் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்தும் நிலைமை அதிகமாக காணப்படுகின்றது. அண்மைய தகவலொன்றின் படி பெருந்தோட்டத்துறையில் 06 தொடக்கம் 14 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களில் 10.3 வீதமான ஆண் பிள்ளைகளும், 14.6 வீதமான பெண் பிள்ளைகளுமாக மொத்தம் 12.4 வீதமான சிறுவர்கள் முழுநேரத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அத்தோடு 4.5 வீதமான சிறுவர்கள் பாடசாலைக்கும் செல்லாது எதுவிதமான தொழிலிலும் ஈடுபடாது வெறுமனே சுற்றித் திரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறாக தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுவர்களும், வெறுமனே சுற்றித் திரியும் சிறுவர்களும் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் உள்ளீர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும் என்பதை மறுப்பதற்கில்லை.

பெற்றோரின் அன்பினையும் பாதுகாப்பினையும் வேண்டி நிற்கும் சிறுவர்களுக்கு வெறுமனே அவர்களின் எஜமானர்களின் துன்புறுத்தல்களும், துஷ்பிரயோகங்களும் ஆதிக்கங்களும் பாரபட்சங்களுமே கிடைப்பதாக புத்திஜீவிகள் விசனப்பட்டுக் கொள்கின்றனர். அத்தோடு சிறுவர்களின் சுயமான சிந்தனை,செயற்பாடுகளுக்கு எவ்வித இடமும் வழங்கப்படாது அவர்களின் எதிர் காலத்தை சூனியமாக்கும் நடவடிக்கைகளே தொடர்வதாகவும் இவர்கள் மேலும் விசனப்பட்டுக் கொள்கின்றனர்.

இன்றைய சிறுவர்கள் நாட்டின் எதிர்கால தலைவர்களாவர். இந்நிலையில் அவர்களுக்கு முறையாக கல்வி புகட்டி, சிறந்த ஒழுக்க விழுமியம் கொண்டவர்களாக வளர்த்தெடுக்கப்படுதல் வேண்டும். அத்தோடு சிறுவர்களை பாதுகாப்பதற்கும், சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளை அரச தரப்பினர் துரிதமாக முன்னெடுக்க வேண்டும். ஆரோக்கியமான பாலியல் கல்வி தொடர்பாக சிறுவர்களை தெளிவூட்டுவதும் அவசியமாகும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் எந்த தரப்பினராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உச்சகட்ட தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். மேலும் புதிய சட்டங்களை உருவாக்குவது ஒருபுறமிருக்க நடைமுறையிலுள்ள சட்டங்களை உரியவாறு அமுல் படுத்துவதால் சாதக விளைவுகள் அதிகமாகும். இந்நிலையில் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் பெற்றோர் கண்டிப்பாக வீட்டில் சிறுவர்களின் கையடக்க தொலைபேசி பாவனையை கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னக்கோனின் கருத்தும் சிந்திக்கத் தக்கதாகும். கையடக்க தொலைபேசிகள் அனர்த்தங்கள் பலவற்றுக்கும் வித்திட்டு வருகின்றமை நீங்கள் அறிந்ததேயாகும்.

• • •

## தமிழர்கள் பகுதி ... தொடர்ச்சி ...

கள அரசு கவனத்தில் கொள்ளாத நிலைமை யினை ஏற்படுத்தியுள்ளது.

இவற்றிற்கான முக்கியமான காரணமாக இன்று தமிழ் தேசிய அரசியலில் உள்ள முரண்பாடுகளையும் குறிப்பட்டேயாகவேண்டும். வடக்கில் செல்வம் அடைக்கலநாதனுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டால் ஏதோவொரு வகையில் அங்குள்ள தமிழ் தேசியம் சார்ந்தவர்கள் சக்திகள் அவற்றினை கையாளும் நிலைமை காணப்படுகின்றது.

ஆனால் கிழக்கில் தமிழ் தேசிய சக்திகளுக்குள் ஏற்படும் முரண்பாடுகள் என்பது பிள்ளையான் போன்றவர்களை வளர்த்துவிடும் செயற்பாடாகவே பார்க்கப்படவேண்டியுள்ளது. தமிழ் தேசிய கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை இன்று அரச தரப்பு கிழக்கில் சிறப்பாக பயன்படுத்திவருகின்றது. இதே போன்று தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளும் கிழக்கில் தமிழர்களின் இருப்பிற் கான கேள்விக் குறியை ஏற்படுத்தும் செயற்பாடுகள் என்பதை தமிழ் தேசிய கட்சிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## இந்த வருடம் ... தொடர்ச்சி ...

களநிலமைகள் பைடனின் வெற்றிக்கு கைகொடுக்கப்போவதில்லை. எனவே தான் உக்ரைனுக்கான படைத்துறை உதவிகளை அமெரிக்கா குறைத்து வருகின்றது. அதுவும் பூட்டீனுக்கு அனுகூலமாகவே அமைந்துள்ளது.

வெள்ளை மாளிகைக்கு டொனால்ட் டிறம் வருவது மெல்ல மெல்ல உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, பைடனுக்கான ஆதரவுகள் அதிகளவு குறைந்து வருவது ஒருபுறம் இருக்க அவர் மீதான குற்றச்சாட்டுக்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

2021 ஆம் ஆண்டில் இருந்து அவர் 418 நாட்கள் விடுமுறையை எடுத்துள்ளதாகவும், இது அவரின் அதிபருக்கான பதவிக் காலத்தில் 40 விகிதம் எனவும் விடுமுறைகளை கண்காணிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசதரப்பு இங்குள்ள அரசதரப்பு அரசியல்வாதிகளுக்கு அனைத்துவிதமான அதிகாரங்களையும் வழங்கி அனைத்துவிதமான சட்டவிரோத செயற்பாடுகளையும் கண்டும் காணாமல் இருக்கின்றது என்றால் சிங்கள அரசுக்கு கிழக்கு மாகாணத்தின் முக்கியத்துவம் எந்தளவுக்கு வழங்கியுள்ளது என்பதை புரிந்து கொள்ளமுடிகின்றது.

ஆனால் இவை எவையும் உணராத வகையில் தமது கட்சி அரசியலையும் தேர்தல் அரசியலையும் முன்னிறுத்தி முன்னெடுக்கும் செயற்பாடுகள் ஒருபோதும் தமிழர்களின் இருப்பினை பாதுகாக்காது. இதனை எதிர்காலத்தில் உணர்ந்துசெயற்படவேண்டும்.

## சிங்கள சவேந்திர ... தொடர்ச்சி ...

ஆகிய பன்னாட்டுக் குற்றங்கள் புரிந்த ஒவ்வொருவருக்கும் ஐநாவும் உலக நாடுகளும் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கான போராட்டம் இனவழிப்புக்கு ஈடுசெய் நீதி கோரும் போராட்டத்தின் முகன்மைக் கூறுகளில் ஒன்று. எந்த வல்லரசுக்கும் பாதந்தாங்கும் முயற்சி இந்தப் போராட்டத்துக்கு உதவாது.

தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட போராட்ட வலிமையையும், தமிழக மக்களின் உறுதியான தோழமையையும், உலகத் தமிழர்களின் ஆக்கத் துணையையும், முற்போக்கு வரலாற்று ஏரணத்தையும், இனவ்ழிப்புக்கு ஆளான இனத்திற்கே உரிய அற வலிமையையும் நம்பித் தொடர்ந்து சலியாது போராடுவோம்! வெல்வோம்!

## புதுவருட ... தொடர்ச்சி ...

அளிப்பதன் மூலமும், அரசியல் ஸ்திரத்தன்மையை வளர்ப்பதன் மூலமும், பொதுமக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் மூலமும், இலங்கை இந்த தடைகளைத் தாண்டி, வெற்றிபெற முடியும். அதற்கான அரசியல் தலைமை ஒன்று நாட்டில் உள்ளதா என்பதுதான் இவ்விடத்தில் எழும் கேள்வி!

## பிராந்தியப் போரா ... தொடர்ச்சி ...

அபு தக்வாவும், மற்றுமொரு கட்டளை அதிகாரியும் கொல்லப்பட்டதுடன், 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஒரு வாரத்திற்கு முன்னர் சிரியாவின் தலைநகர் மீது இஸ்ரேல் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் ஈரானைச் சேர்ந்த படைத்துறை ஆலோசகரான ஜெனரல் தர அதிகாரி கொல்லப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதேசமயம், செங்கடல் பகுதியில் ஈரான் தனது டிஸ்ரோயர் கடற்படைக் கப்பலை இறக்கியுள்ளது. ஈரானின் கடற்படையினர் வரவைத் தொடர்ந்து தனது மிகப்பெரும் விமானந்தாங்கி கப்பலான ஜெரால்ட் போர்ட்டை அந்த பகுதியில் இருந்து அமெரிக்கா நகர்த்தியுள்ளது. எனினும் இற்றுமொரு விமானந்தாங்கி கப்பலான எசன்கொவர் அந்த பகுதியில் தரித்து நிற்கின்றது.

22 நாடுகளை கொண்ட கடற்படையின் கூட்டணியினர் செங்கடல் பகுதியில் தாம் மேற்கொள்ளவுள்ள தாக்குதல் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிடப்போவதாக தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் லெபனானில் இருந்து தமது மக்களை உடனடியாக வெளியேறுமாறு கனடா, சுவீடன் மற்றும் ஜேர்மனி உட்படப பல நாடுகள் அவசர அறிவிப்பை விடுத்துள்ளன.

பிரந்திய மோதல்கள் ஏற்படக்கூடாது என மேற்குலகம் விரும்பியபோதும், உக்ரைன் போரைப் போல போர் அவர்களின் கைகளை மீறிச் சென்றுகொண்டிருக்கின்றது. அதாவது இந்த வருடத்தின் முதல் 3 நாட்களுமே மிகப்பெரும் அனர்த்தங்களுடன் தான் நகர்ந்துள்ளன.

நடக்கும் சம்பவங்களை பார்க்கும்போது உலகம் 3 ஆவது உலகப்போரை நோக்கி மெல்ல மெல்ல நகர்வது மட்டும் தெளவாகின்றது.

## ஒழுக்கம் உயர்வு ... தொடர்ச்சி ...

வருகின்றன. அதனை இந்த சம்பவத்தில் உறுதியாக கடைப்பிடித்துள்ளனர். அதற்கு பயணிகளும் ஒத்துழைத்துள்ளனர். அதுவே 382 பேரின் உயிரை காப்பாற்றியுள்ளது.